வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 25.05.2023 வியாழக்கிழமை | இதழ் : 167 | பக்கங்கள் : 16




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# பதவி நீக்கப்பட்டார் ஜனக ரத்நாயக்க

## வாக்கெடுப்பில் ஆதரவு - 123, எதிர்ப்பு - 77

கொழும்பு, மே 25

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க பதவி நீக்கப்பட்டார். அவரை பதவி நீக்கம் செய்வதற்கான பிரேரணை பாராளுமன்றில் 46 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேறியது.

சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த சமர்ப்பித்த இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக ஆதரவாக 123 வாக்

15



# மின்சார கட்டணம் 23 வீதம் குறையும்

## ஜூலை முதல் நடைமுறை என்கிறார் அமைச்சர்

கொழும்பு, மே 25

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் வீட்டுப் பாவனைக்கான மின்சார கட்டணம் 23 சதவீதத்தால் குறைக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், வழிபாட்டுத் தலங்களுக்கான மின்சார கட்டணம் 23 சதவீதத்தாலும் உல்லாச விடுதிகளுக்கான

15



## பொலநறுவையில் வரலாற்று பழமைமிக்க

# சிவாலயங்களை அழித்து விகாரைகள் எழுகின்றன

## இந்துக்களை பாதுகாக்க வருமாறு அழைப்பு

மட்டக்களப்பு, மே 25

**பொலநறுவையின் புராதன சிவாலயங்கள் அழிக்கப்பட்டு பௌத்த விகாரைகள் கட்டப்படுகின்றன. தொல்பொருள் திணைக்களமும் - சில பிக்குகளும் இணைந்தே இந்தத் திட்டத்தை முன்னெடுக்கின்றனர் என்று பொலநறுவை இந்துக் குருமார் ஒன்றியம் கவலை தெரிவித்துள்ளது.**




அத்துடன், சோழர் காலத்தில் அமைக்கப்பட்ட முதலாம் இலக்க சிவன் ஆலயம் தற்போது பாடப் புத்தகத்திலேயே உள்ளது. அந்த ஆலயம் இடிந்து விழுந்துவிடப் போகிறது என்ற பொய் கூறி மைத்திரிபால சிறிசேனவின் காலத்தில் இடித்து அழிக்கப்பட்டுவிட்டது - என்று மட்டு. ஊடக அமையத்தில் நேற்று இந்துக் குருமார் ஒன்றியம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், முதலாம் இலக்க சிவன் ஆலயத்தின் சிவ

15

# தமிழ் - பௌத்தர்கள் யாழில் இருக்கிறார்கள்!

## ராகுல தேரர் சொல்கிறார்

கொழும்பு, மே 25

யாழ்ப்பாணத்தில் தமிழ் - பௌத்தர்கள் இருக்கிறார்கள். எல்லோரும் ஒன்று சேர்ந்து வாருங்கள் - நிர்வாக சபை அமைத்து தையிட்டி திஸ்ஸ விகாரையை உங்களிடமே ஒப்படைக்கிறோம் - என்று கூறியுள்ளார் பொகவந்தலாவை தமிழ் பிக்குவான ராகுல தேரர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பொது மக்களின் காணியிலேயே தையிட்டி திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

மேலும், இலங்கையில் தமிழ் பௌத்தர்க

15



வரலாற்று பிரசித்தி பெற்றதும் பாடல் பெற்ற தலமுமான திருக்கேதீச்சரம் ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமான போது...!

## விகாரைக்கு எதிராக போராட்டம்:

# கைதான 9 பேருக்கும் நீதிமன்று நேற்று பிணை!

யாழ்ப்பாணம், மே 25

தையிட்டி விகாரைக்கு எதிராக நேற்று முன்தினம் போராட்டம் நடத்தியவேளை கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 9 பேரும் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர். அத்துடன், போராட்டத்தை தொடரவும் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

15

# பொலிஸ் பொறுப்பதிகாரியால் எனது உயிருக்கு அச்சுறுத்தல்!

## நீதிமன்றில் சுகாஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 25

"ஒரு கொலை வழக்கு மற்றும் ஒன்பது மனித உரிமைகள் மீறல் வழக்குகள் உள்ள பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம்", என்று சட்டத்தரணி க. சுகாஷ் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

15

# முகமாலையில் விபத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

## இரு சிறுவர்கள் படுகாயம்

வடமராட்சி, மே 25

இ. போ. ச. பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். இரு சிறுவர்கள் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

15

# சில சிங்கள அரசியல்வாதிகளே ஈஸ்டர் தாக்குதலை திட்டமிட்டனர்!

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

கொழும்பு, மே 25

பலம் பொருந்திய சில சிங்கள அரசியல்வாதிகளே உயிர்த்த ஞாயிறு தாக்குதலை திட்டமிட்டனர் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அல்சுஹிரியா அரபுக் கல்லூரியில் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா வழக்கில் சாட்சிகள் என கருதப்படக்கூடியவர்கள் உட்பட பலர் கைதுசெய்யப்பட்டமை குறித்த ருவிற்றர் பதிவுக்கு பதில் அளித்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க,

"முஸ்லிம்களுக்கு எதிரான இந்த நடவடிக்கை கடந்த 2013ஆம் ஆண்டில்

15

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவேன்!

## ஜனக ரத்நாயக்க

கொழும்பு, மே 25

ஜனாதிபதி தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவேன் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஜனக ரத்நாயக்க நேற்று தெரிவித்தார்.

"பொதுப் பயன்பாடுகள் ஆணைக்

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

ஜனாதிபதித் தேர்தல்தான் முதலில் நடக்கும் என்பது அநேகமாக முடிவான ஒன்றாகிவிட்டது தெரிந்ததுதான். ஆனால், ஏற்கனவே வேட்புமனு தாக்கல் செய்த உள்ளூராட்சி தேர்தல் பற்றி பலரும் மறந்தே விட்டனர்.

அண்மையில் ஓர் அரசியல் தலைவர், 'உள்ளூராட்சி தேர்தல் நடத்துவதற்கு நிதி இல்லை என்றார்கள். ஜனாதிபதி தேர்தல் நடத்துவதற்கு நிதி இருக்கின்றதா?' என்று கேட்டிருந்தார்.

ஆனால், இன்றைய ஜனாதிபதி, மக்கள் ஆணை இல்லாதவர் என்று திரும்பத் திரும்பக்கூறி வரும் எதிர்க்கட்சியினர், அப்படியோர் ஆணைக்காக ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுவதை எதிர்க்கப் போவதில்லை.

உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்படாத நிலையில் அதற்கும் முன்னர் நடத்தப்பட வேண்டிய மாகாண சபைகளுக்கான தேர்தலும் நடத்தப்பட வேண்டும் என்று சர்வதேச ரீதியில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

முக்கியமாக இந்தியத் தரப்பு மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தவேண்டும் என்று நீண்டகாலமாக இலங்கை அரசை கேட்டு வருகின்றது. தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் அவ்வாறு மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரி இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதி நீண்டகாலமாகிவிட்டது. இதுகுறித்து அவர்களுக்கு இந்தியப் பிரதமரிடமிருந்து எந்தவித பதிலும் வரவில்லை என்பதைவிட, அவர்களும் தாம் கடிதம் எழுதியதையே இப்போது மறந்துவிட்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த தேர்தல் என்றால் அது ஆட்சியைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல்தான் என்று தெளிவாகக் கூறியிருந்தார். அதாவது, ஜனாதிபதி தேர்தலே முதலில் நடக்கும் என்பதே அதன் பொருள். அவர் அண்மையில், தன்னை சந்தித்த தமிழ் எம். பி. ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் தனக்குத்தானே ஆதரவு தருவீர்கள் என்று கேட்டிருந்தது பற்றி முன்னரும் ஒரு தடவை எழுதியிருந்தேன்.

இன்றைய தலைவர்களில் சிறுபான்மையினரின் பிரச்னைகளை நன்கு அறிந்த தலைவர் என்றால் அது ரணில்தான் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது. ஆனால், அது ஒன்றுக்காகவே சிறுபான்மை மக்கள் குறிப்பாக, தமிழ் மக்கள் அவருக்கு வாக்களிப்பார்கள் என்று அவர் கணக்குப் போடுகிறாரோ தெரியவில்லை.

ஆனால், பெப்ரவரிக்கு முன்னதாக தீர்வு பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தம் முழுமையாக அமுல் செய்யப்படும், இந்த ஆண்டுக்குள் தீர்வு என்று 'சம்பந்தன் பாணி'யில் அறிவிப்புகளை செய்துகொண்டிருந்தால், சம்பந்தனை மறந்துவிட்டது போல அவரையும் தமிழ் மக்கள் மறந்துவிட அதிக நேரம் ஆகப் போவதில்லை.

தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்டு வருவதற்கு முன்னதாக ஆகக்குறைந்தது இப்போது இருக்கின்ற நிலையிலேயே - அதாவது பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்தாவிட்டாலும்கூட மாகாண சபைகளுக்கு தேர்தலை நடத்தி, மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்று மாகாணத்தை ஆட்சி செய்கின்ற ஒரு நிலைமையையாவது ஏற்படுத்திவிட்டே ஜனாதிபதி தேர்தலில் வாக்குக் கேட்க தமிழ் மக்களிடம் வருவது நல்லது என்று அவருக்கு நெருக்கமான சில தமிழ் வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன என்று தெரியவருகின்றது.

மாகாண சபைகளுக்கு தேர்தலை நடத்துவது என்பது பாராளுமன்றத்தில் தமிழரசு எம். பி. சுமந்திரன் தாக்கல் செய்துள்ள மாகாண சபை தேர்தல் திருத்த சட்டத்தை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிவிட்டாலே போதுமானது.

நாட்டில் ஒரு தேர்தலை நடத்துவது என்றால் பல பில்லியன் ரூபாய்களை செலவிட வேண்டியிருக்கின்றது. அது எந்தத் தேர்தலாக இருந்தாலும் அண்ணளவாக ஒரே செலவே ஏற்படும். உள்ளூராட்சி தேர்தலுக்கு வாக்குச்சீட்டு அச்சிடுவதற்கு சிலவேளைகளில் அதிக செலவாகலாம். ஆனால், ஒரு தேர்தல் செலவில் வாக்குச்சீட்டு அச்சிடுவது என்பது மிகச்சிறிய தொகை மாத்திரமே.

நாட்டில் ஜனாதிபதி தேர்தல் முதலில் நடந்தாலும் அதனையடுத்து மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் தேர்தல் நடத்தப்படவே வேண்டும். போதாக்குறையாக சர்வதேச நாணய நிதியமும் மக்களின் ஜனநாயக உரிமையை மதித்து தேர்தல்கள் உரியவேளையில் நடத்தப்படவேண்டும் என்றும் அரசுக்கு 'பிடி' போட்டிருக்கின்றது. முதலில் நடக்கும் ஜனாதிபதி தேர்தலில் யார் வென்றாலும் அடுத்ததாக மற்றைய தேர்தல்களையும் நடத்தியே ஆகவேண்டும். அப்படி மற்றுமொரு தேர்தல் நடத்த மீண்டும் பல பில்லியன் ரூபாய்களை செலவிட வேண்டியிருக்கும்.

எனவே, இத்தகைய செலவுகளைத் தவிர்க்க ஜனாதிபதி தேர்தலுடன் மற்றைய தேர்தல்களையும் ஒரே நாளில் நடத்தினால் வாக்குச்சீட்டு அச்சிடும் செலவு மாத்திரமே மேலதிக செலவாக ஏற்படும். அமெரிக்காவில் ஒரு நாளில் அனைத்து தேர்தல்களும் நடத்தப்படுவதை கவனத்தில் கொள்ளலாம். இதே போல நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலுடன் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தலையும் ஒன்றாக நடத்தலாம் என்று ஜனாதிபதிக்கு சிலர் ஆலோசனை கூறியிருக்கின்றனராம்.

எல்லாம் நல்லதாக நடந்தால் நாட்டுக்கும் நல்லதுதான்.!

- ஊர்க்குருவி

# ஆசிரியரை மாணவன் தாக்கினார் என சாடல்!

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணத்தின் புறநகர பாடசாலை ஒன்றில் பயிற்சி ஆசிரியர் ஒருவரை மாணவர் ஒருவர் தாக்கினார் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றதாகவும் தெரிவிக் கப்பட்டது.

குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் இதே மாணவனால் பிரச்னை ஒன்று ஏற்பட்டபோது, அந்த மாணவனின் தந்தை ஆசிரியர் ஒருவரை தாக்கினார் என்று கூறப்படுகின்றது.

முன்னர் நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று குற்றஞ்சாடுகின்றது.

இந்தநிலையில், ஆசிரியர் மீதான தாக்குதல்கள் ஆசிரியர் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

# ஜனநாயகத்தை சீர்குலைத்தமைக்காக சார்ள்ஸுக்கான பரிசே ஆளுநர் பதவி!

கொழும்பு, மே 25

உள்ளூராட்சி தேர்தலை சீர்குலைத்ததற்கு பி. எஸ். எம். சார்ள்ஸுக்கு வடக்கு மாகாண ஆளுநர் பதவி பரிசாக வழங்கப்பட்டது என பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய ஜே. வி. பி. பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மேலும், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் சார்ள்ஸ், ஆணைக்குழு உறுப்பினர் பதவியை துறந்தார். அவர் தனிப்பட்ட காரணங்களால் பதவியை துறப்பதாக சொன் னார்.

யார் என்ன சொன்னாலும், அரசியலை தெரிந்தவர்களுக்கு இந்த விடயங்கள் புரியும். தேர்தலை சீர்குலைத்தமைக்கு பரிசாக அவர் வடக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டார் - என்றார்.

இதேவேளை, சுயாதீன குழுவின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவிக்கையில், தேர்தலை இல்லாமல் செய்ய ஆணைக்குழுவை வைத்து அரசாங்கம் என்னவெல்லாம் செய்தது -சார்ள்ஸ் அம்மையார் ஆடிய ஆட்டம் என்ன. நாட்டின் ஜனநாயகத்தை இல்லாமல் செய்தமைக்கு பரிசாக அவருக்கு ஆளுநர் பதவி வழங்கப்பட்டது. அவர் வடக்கு ஆளுநராக உட்கார்ந்திருக்கிறார் - என்றார்.

(ஐ)

# பிரதி வெள்ளிக்கிழமைதோறும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை!

கொழும்பு, மே 25

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய பிரதி வெள்ளிக்கிழமைகளில் காலை வேளையை டெங்கு ஒழிப்பு நேரமாக பிரகடனப்படுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் அரச, தனியார் நிறுவனங்களிலும் பாடசாலைகள், வீடுகள் அனைத்திலும் சுற்றாடலை சுத்தப்படுத்தும் செயல்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும் என சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ். ஜனக சிறீ சந்திரகுப்த வலியுறுத்தினார்.

இது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஊடாக அனைத்து நிறுவனங்களையும் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு பொலிஸ், முப்படையினர் மற்றும் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வெளள்ளிக்கிழமைகளில் காலையில் இரண்டு மணித்தியாலத்தையாவது சூழலை சுத்தப்படுத்தும் செயல்பாடுகளுக்காக ஒதுக்கிக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ். ஜனக சிறீ சந்திரகுப்த மக்களிடம் கோரிக்கை விடுத்தார்.

(ஐ)

## மந்திகைவாசிக்கு அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் ரூ. 10 இலட்சம் பரிசு

வடமராட்சி, மே 05

'வலம்புரி' விசேட அதிர்ஷ்ட இலாப சீட்டில் மந்திகையை சேர்ந்த ஒருவர் 10 இலட்சம் ரூபாயை வென்றுள்ளார். 23ஆம் திகதி நடந்த சீட்டிழுப்பிலேயே அவர் இந்தப் பரிசுத் தொகையை வென்றுள்ளார்.

மந்திகையில் தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையின் நேரடி முகவரான இ. சுதர்சன் என்பவரிடம் கொள்வனவு செய்யப்பட்ட இந்த பரிசுத் தொகை கிடைத்துள்ளது.

இதற்கு முன்னரும், இதே முகவரிடம் இருவருக்கு தலா 10 இலட்சம் ரூபாய் பரிசும் 12 பேருக்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசும் விழுந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# பூசா சிறையில் இருந்த கைதி தப்பியோட்டம்!

கொழும்பு, மே 25

அதி உயர் பாதுகாப்பு சிறைச்சாலையான பூஸாவிலிருந்த கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளதாக காலி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் குற்றச்சாட்டில் சிறையில் இருந்த மொரட்டுவை லுனாவ வைத்தியசாலை தோட்டத்தைச் சேர்ந்த அசோக ருக்மல் பெர்னாண்டோ என்ற கைதியே தப்பிச் சென்றுள்ளார்.

குறித்த கைதி, நாள் வேலைப் பிரிவில் நியமிக்கப்பட்டு சிறை வளாகத்தைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டார்.

கைதிகளை மீண்டும் அறைகளுக்கு அனுப்பும் தினசரி வேலையின் முடிவில் இந்த கைதி இல்லை என்பதை அறிந்ததும், அவர் தப்பியோடியது உறுதி செய்யப்பட்டது.

குறித்த கைதியை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

(அ)

# பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் கசிப்புடன் புத்தூரில் கைதானார்!

யாழ்ப்பாணம், மே 25

மல்லாகம் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் ஒருவர் 20 லீற்றர் கசிப்புடன் நேற்று கைது செய் யப்பட்டார்.

23 வயதான சந்தேகநபர் புத்தூர் பகுதியில் வைத்து நேற்று புதன்கிழமை அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைதான நபருக்கு ஏற்கனவே குற்றம் ஒன்று தொடர்பில் வழக்கு உள்ளது. இதற்காக மல்லாகம் நீதிமன்றம் அவருக்கு பிடியாணை பிறப்பித்துள்ளது என்றும் தெரியவருகின்றது.

கைதான நபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-03)

ஈழநாடு
Eelanadu
25.05.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 11

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்திரபாலாவின் கூற்று?

தமிழர் வரலாற்றின் தொல்பொருள் சான்றுகளை அடையாளப்படுத்துவது முயல்கொம்பாக மாறியிருக்கின்றது. புதிய விகாரைகளை ஸ்தாபிக்கும் விவகாரம் தொடர்ந்தும் ஒரு பிரச்னையாக இருக்கின்றது. இவ்வாறானதொரு சூழலில் பேராசிரியர் இந்திரபாலாவின் பெயரில் யாழ். பல்கலைக் கழகத்தில் அருங்காட்சியகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இது வரவேற்கப்பட வேண்டிய விடயம். இந்த நிகழ்வில் பேசியிருக்கும் யாழ். பலகலைக்கழக துணைவேந்தர் சற்குணராசா, “தமிழர்கள் தனித்து இயங்கும் திறன் கொண்டவர்கள்”, என்று தெரிவித்திருக்கின்றார். தமிழர்களுக்கென்று சில தனித்துவங்கள் இருக்கின்றனதான். அதில் முரண்பட ஒன்றுமில்லை. ஆனால், தமிழர்களால், அரசியலில் தனித்துவமாக வெற்றியீட்ட முடிந்ததா - என்றால் பூச்சியமே பதிலாகக் கிடைக்கும். ஏனெனில், தமிழர்களின் முக்கால் நூற்றாண்டு கால - அதற்கு அப்பால் சென்று, இராமநாதன்களின் காலத்தையும் சேர்த்தால் ஒரு நூற்றாண்டு எனலாம். இந்தக் காலத்தில் தமிழர்களால் அரசியலில் வெற்றிபெற முடிந்ததா என்றால் எவரிடம் பதில் உண்டு?

ஏன் தமிழர்களால் வெற்றிபெற முடியவில்லை? ஏன் தமிழர்கள் தொடர்ந்தும் தோற்றுக் கொண்டேயிருக்கின்றனர்? யுத்தத்துக்குப் பின்னரான, கடந்த 14 வருடங்களாக தமிழ் மக்களுக்கு எதிராக ஓர் இனப்படுகொலை நடைபெற்றதாகக் கூறி பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும்கூட, சிங்கள ஆட்சியாளர்களை இறங்கிவரச் செய்ய முடியவில்லை. அரசியலமைப்பில் இருப்பதைக்கூட அமுல்படுத்தும் விடயத்தில் அவர்களிடம் இரந்து நிற்க வேண்டியிருக்கிறது! ஏன் இந்த நிலைமை?

இந்த இடத்தில்தான் இந்திரபாலாவின் கூற்று ஒன்றை நினைவுபடுத்த வேண்டியிருக்கின்றது. “பிரமாண்டமான இந்தியாவுக்கு அருகில் ஒரு குட்டித் தீவால் தனித்துவமாகத் தப்பிப்பிழைக்க முடிந்திருக்கின்றதென்றால் அதற்கு இராஜதந்திரம் தேவை’ தமிழர்களின் தொடர் தோல்வியை புரிந்து கொள்வதற்கு இந்தக் கூற்று போதுமானது. லலித் அத்துலத் முதலி ஒரு முறை கூறியிருந்தார், “எங்களின் பலம் எங்களுடைய மூதாதையர்கள் எங்களுக்கு அளித்த இராஜதந்திர ஆற்றலாகும்.” மறுபுறம் நமது பக்கம் திரும்பினால், தமிழரின் இராஜதந்திர ஆற்றலோ பூச்சியம். தோற்றுக் கொண்டிருப்பதே தமிழர்களின் அரசியல் தலையெழுத்ததாக இருக்கின்றது. இதற்கான காரணம் ஒன்றேயாகும்.

தமிழரின் மீட்பர்களாக முகம் காட்டிய மிதவாதிகளும் சரி -இயக்கங்களும் சரி - எதிரிகளை அதிகரித்துக் கொண்டிருந்தார்களே தவிர, உலகின் சூட்சுமங்களை புரிந்துகொண்டு அதற்கேற்ப காய்களை நகர்த்தும் இராஜதந்திர கலையை கற்றுத் தேறவே இல்லை. சூழ்நிலைகள் மாறுகின்ற போது நாங்களும் மாற வேண்டும் - என்னும் ஒரு சிறிய உண்மையைக்கூட தமிழ் அரசியல் தரப்புகளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இராஜதந்திர ஆற்றலின்மையே தமிழர்களுக்கு தொடர்ந்தும் தோல்வியை கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இராஜதந்திரத்தின் அடிப்படை பலம் என்னும் ஒரு கூற்று உண்டு. - ஆனால், அது சிங்களவர்கள் போன்ற சிறிய இனத்துக்கு பொருந்தாது. ஏனெனில், உலகத்தை சிங்களவர்கள் பலம்கொண்டு எதிர்கொள்ளவில்லை. ஏனெனில், அவர்களிடம் பலமில்லை. ஆனால், தந்திரம் கொண்டு உலகை எதிர்கொள்கின்றனர் - வெற்றிபெறுகின்றனர். ஒரே நேரத்தில் இந்தியாவையும் சீனாவையும் அமெரிக்காவையும் ஏதோவொரு வகையில் கையாள்கின்றனர். ஒவ்வொருவரின் மூலமும் பெற வேண்டியதைப் பெறுகின்றனர்.

மேற்குலகின் மனித உரிமைகள் சார்ந்த அழுத்தங்களை சீனாவுடனான நட்பைக் கொண்டு எதிர்கொள்கின்றனர். மேற்குலகின் நகர்வுகள் ஒரு கட்டத்துக்கு மேல் சென்றுவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கும் சிங்கள ஆளும் வர்க்கம் இந்தியாவின் பிராந்திய முக்கியத்துவத்தைக் கொண்டு அவர்களை சமாளிக்கின்றனர். இன்றுவரையில், சமதூரத்தில் ஒன்றுக்கொன்று முரண்பாடான தரப்புகளை நண்பர்களாகக் கொள்ளும் இராஜதந்தரத்தின் மூலம் நன்மைகளைப் பெற்றுவருகின்றனர். இதன் மூலம், பிரமாண்டமான இந்தியாவுக்கு அருகில் - மிகவும் அருகில் எட்டுக் கோடி தமிழ் மக்களை கொண்டிருக்கும் சூழலில் தனித்துவத்துடன் வெற்றி நடை போடுகின்றனர். இப்போது யார் தனித்துவமானவர்கள்?

# 11ஆவது புத்தக அரங்க விழா இணுவில் மத்திய கல்லூரியில்

*யாழ்ப்பாணம், மே 25*

*தேசிய கலை இலக்கிய பேரவையின் 50ஆவது ஆண்டையொட்டி “நூறு மலர்கள் மலரட்டும்“ என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் 11ஆவது நிகழ்வு இணுவில் மத்திய கல்லூரியின் ஆரம்ப பிரிவில் எதிர்வரும் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி ஞாயிற்றுக் கிழமை வரை நடைபெறவுள்ளது.*

*நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தப் புத்தக அரங்க விழாவின் முதல்நாள் நிகழ்வு ஈழத்து நூல்களை அறிவோம் - நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் நாடகக் கலைஞர் நல்லையா சிதம்பரேஸ்வரன் நினைவு அரங்கில் ஆசிரியரும் கலைஞருமான ந. தவசோதிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.*

*நூல் அறிமுக உரைகளை இணுவில் வாகீசனின் “ஆதலால் நான் இங்கு நலம்” கவிதைத் தொகுப்பு பற்றி ஆசிரியர் இ. கிருஸ்ணராஜ், மருத்துவர் கந்தையா குருபரனின் ‘தாயாகிய தனித்தவம்’ மருத்துவ வழிகாட்டி நூல் பற்றி உளவளத்துணையாளர் நா. நவராஜ், க. இ. கமலநாதனின் ‘தாய்த்திருநாடு’ நாடக நூல் தொடர்பாக எழுத்தாளர் ரஜிதா அரிச்சந்திரன், பு. கணேசராஜாவின் ‘பொறுப்பது உன் விதியோ?’ நாடக தொகுப்பு நூல் தொடர்பாக எழுத்தாளர் நா. சிவசிதம்பரம் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.*

*இந்த நிகழ்ச்சியை மாணவி தயானந்தன் டிபானிகா தொகுத்து வழங்குவார்.*

*தொடர்ந்து மாலை 6 மணியளவில் செம்முகம் நாடகக் குழுவின் தயாரிப்பில் க. சத்தியசீலனின் நெறியாள்கையில் உருவான ‘எலியார் எங்கே போனார்?’ சிறுவர் நாடகமும், சண் நாடகக் குழுவின் தயாரிப்பில் பு. கணேசராசாவின் நெறியாள்கையில் உருவான ‘அரோகரா’ ஓராள் ஆற்றுகையும், ‘தலையெழுத்து’ நாடகமும் இடம்பெறவுள்ளன.*

*ஆர்வலர்கள் அனைவரையும் இந் நிகழ்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.*

*(ஐ)*

# கருணாநிதி நூற்றாண்டு விழா!

*கொழும்பு, மே 25*

*தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி நூற்றாண்டு விழா எதிர்வரும் ஜூன் 3ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு தமிழ் சங்கத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.*

*இலங்கை - இந்திய தொடர்பாளர் மணவை அசோகன் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வு மலையக மக்கள் முன்னணி சிரேஷ்ட உப தலைவர் சதீஷ் குமார் சிவலிங்கம் தலைமையில், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.*

*கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்த குமார் கருணாநிதியின் திருவுருவ படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவர்.*

*இந்த நிகழ்வில் தமிழகத்திலிருந்து மக்கள் நீதி மய்யம் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் எம். சிறிதர், தி. மு. மாணவர் அணித் தலைவர் எம் நாகரத்திரன் ஆகியோர் கலந்து கொள்வர்.*

*சிறப்புரையை சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஆற்றுவார். வாழ்த்துரைகளை தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம். பி, மலையக மக்கள் முன்னணி தலைவர் வே. இராதிகிருஷ்ணன் எம். பி. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளி கட்சி தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம். பி., கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இந்து கலாசார முன்னாள் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜன், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஆர். யோகராஜன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.* *(ஐ)*

# கண் பரிசோதனை முகாம்!

*யாழ்ப்பாணம், மே 25*


*கண்புரை சத்திர சிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களை தெரிவு செய்வதற்கான பரிசோதனை முகாம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையிலும் தொல்புரம் ஆரம்ப சுகாதார மருத்துவப் பிரிவிலும் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது என்று யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.*

*யாழ். மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை (கற்றாக்) சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு யாழ். போதனா மருத்துவமனையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவசமாக சத்திர சிகிச்சையை மேற்கொள்ள ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*இதற்கான நோயாளர்களை தெரிவுசெய்யும் கண்பரிசோதனை முகாம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையிலும், தொல்புரம் ஆரம்ப சுகாதார மருத்துவப் பிரிவிலும் நடைபெறவுள்ளது.*

*கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்கள் பெயர்களை பதிவு செய்யுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**மே - 25 வியாழக்கிழமை**
**சோபகிருது வருடம் - வைகாசி 11**
**நல்ல நேரம் : 10.30 - 12.00**
**ராகு காலம் : 01.30 - 03.00**
**திதி : சஷ்டி**



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். திடீர் யோகம் கிட்டும்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் அதிக லாபம் ஈட்டுவீர்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கடகம்**
சந்திரன் நீடிப்பதால் உங்களை அறியா மலேயே படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம். நேர்மறை எண்ணம் தேவைப்படும்.

**சிம்மம்**
குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களுடன் விவாதம் வேண்டாம். சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கன்னி**
குடும்பத்தில் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். பெருந்தன்மையுடன் நடந்துக்கொள்ளும் நாள்.

**துலாம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். சக ஊழியர்கள் மதிப்பார்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். சக ஊழியர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். அலைச்சல் அதிகரிக்கும்.

**மகரம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**கும்பம்**
சமயோசிதமாக பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சமங்களை சொல்லித் தருவார். அமோகமான நாள்.

**மீனம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். அக்கம் - பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். புது பொறுப்பை ஏற்பீர்கள். புதுமை

### பாராளுமன்றில் சோழர் செங்கோல்:

# “தமிழர் கலாசாரத்தை மீட்ட பிரதமர் மோடிக்கு நன்றி!”

சென்னை, மே 25

செங்கோல் மூலம் தமிழ் கலாசாரத்தை தேசிய அரங்கில் மீட்டெடுத்த பிரதமருக்கு நன்றி என்று பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ருவிற்றரில் இட்ட பதிவில்,

“நமது நாடு சுதந்திரமடைந்த போது, ஆங்கி லேயர்களிடமிருந்து ஆட்சி மாற்றத்தைக் குறிக்கும் வகையில், “வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்” என்ற தேவார திருப்பதிகத்தைப் பாடி, தமிழகத்தை சேர்ந்த திருவாவடுதுறை ஆதீனம் பண்டித நேருவிடம் சோழ மன்னர்கள் பயன்படுத் தியதைப் போன்ற செங்கோலை வழங்கினார்.



தமிழ் மன்னர்கள் ஆட்சியின் முக்கிய அங்கமாக விளங்கிய செங்கோலின் முக்கியத்துவம் குறித்து இன்றைய (நேற்று) செய்தியாளர் சந்திப்பில் நமது உள்துறை அமைச்சர் அமித்ஷா விரிவாக எடுத்து ரைத்தார். ஆனால், அதற்குப் பிறகு, அதன் முக்கியத்துவத்தை இழந்துவிட்ட செங்கோல், தற்போது பிரதமரின் நமது பாரத கலாசாரத்தை மீட்டெடுக்கும் முயற்சியால், மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது.

புதிய பாராளுமன்ற கட்டடத் திறப்பு விழாவின் போது, நமது பிரதமருக்கு, சோழர் காலத்து செங் கோல் வழங்கப்படவிருக்கிறது. புதிய பாராளுமன் றக் கட்டடத்தை அலங்கரிக்கும் வகையில் இந்த செங்கோல் இடம்பெறும். தமிழ் கலாசாரத்தைத் தேசிய அரங்கில் மீட்டெடுத்ததற்காக, பிரதமருக்கு தமிழக மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.” - என்று கூறியுள்ளார். (ஐ)

# பாடசாலைகளில் தமிழ் இனி கட்டாயம்

சென்னை, மே 25

தமிழகத்தில் உள்ள அனைத்து வகை பாடசாலைகளிலும் தமிழ் மொழி கட்டாய பாடமாக இருக்க வேண்டும் என்று தனியார் பாடசாலைகள் இயக்குநர் நாகராஜ முருகன் சுற்றறிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த சுற்றறிக்கையில்,

தமிழ்நாட்டில்உள்ள அனைத்து வகையான தனியார் பாடசாலைகளிலும் இனி தமிழ் மொழி கட்டாயப் பாடமாக இருக்க வேண்டும். தகுதியான ஆசிரியர்களை பணியமர்த்தி மாணவர்களுக்கு தமிழ் கற்று தரவேண்டும்.

2023 - 2024 கல்வியாண்டில் 9ஆஆம் வகுப்பு வரையும், 2024 - 2025 கல்வியாண்டில் 10ஆம் வகுப்பு வரையும் தமிழ் பாடம் கட்டாயமாக்கப்படுகிறது. அடுத்த கல்வியாண்டில் அனைத்து மாணவர்களும் பொதுத்தேர்வில் தமிழ் பாடம் கட்டாயம் எழுத வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# தமிழை கட்டாய பாடமாக்காத பாடசாலை முன்பு போராட்டம்

### பா. ம. க. கட்சி எச்சரிக்கை

சென்னை, மே 25

“தமிழ் கற்றல் சட்டத்தின்படி முதலாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை தமிழை கட்டாயப் பாடமாக கற்பிப்பதற்கு ஏதேனும் பாடசாலைகள் மறுத்தால், அங்கு தமிழ் கட்டாய பாடமாக்கப்படும் வரை அவற்றின் முன் பா. ம. க. அறவழிப் போராட்டம் நடத்தும்” என்று அந்தக் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில், “தமிழகத்தில் 2014ஆம் ஆண்டு பிறப்பிக்கப் பட்ட அரசாணையின்படி, தமிழ்நாடு மாநில பாடத்திட்டம் தவிர்த்த பிற கல்வித் துறை பாடத்திட்டத்தை பின்பற்றும் பள்ளிகளில் நடப்பாண்டில் ஒன்பதாம் வகுப்பு வரையிலும், அடுத்த ஆண்டில் பத்தாம் வகுப்பு வரையிலும் தமிழ் கட்டாய பாடமாக்கப்பட வேண்டும் அதற்கான பரீட்சைகள் நடத்தப்பட வேண்டும் என்று தனியார் பள்ளிகள் இயக்கம் அறிவித்துள்ளது. தனியார் பள்ளிகளை சரியான நேரத்தில் எச்சரிக்கும் வகையிலான இந்த அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

ஆனால், இதை வெற்றியாக செயல்படுத்துவதற்கு அரசியல் துணிவும், விழிப்புணர்வும், தொடர் முயற்சியும் தேவை என்பதை தனியார் பள்ளிகள் இயக்கம் உணர வேண்டும். தமிழகத்தில் தமிழை ஒரு பாடமாகக்கூட படிக்காமல் பட்டம் பெற முடியும் என்ற அவலம் நிலவுகிறது. அதை மாற்றுவதற்காக பா. ம. க. கொடுத்த அழுத்தத்தின் காரணமாக கடந்த 2006ஆம் ஆண்டு ஜூன் 9ஆம் நாள் தமிழ் கற்றல் சட்டத்தை அப்போதைய முதல்வர் கருணாநிதி கொண்டு வந்து நிறைவேற்றினார். எனினும் பல காரணங்களால் இன்று வரை, மாநில பாடத் திட்டத்தை பின்பற்றும் அனைத்துப் பாடசாலைகளிலும் தமிழ் பாடம் கட்டாயமாக்கப்படவில்லை என்பதே உண்மையாகும் - என்றும் கூறியுள்ளார்.

# பாராளுமன்றம் திறப்பு விழாவை புறக்கணிப்பதாக தி.மு.க. அறிவிப்பு

### - 19 கட்சிகள் புறக்கணிக்கின்றன -

சென்னை, மே 25

குடியரசு தலைவரை அழைக்காததால், புதிய பாராளுமன்றக் கட்டடத் திறப்பு விழாவை புறக்கணிக்கப் போவதாக தமிழகத்தை ஆளும் தி. மு. க. நேற்று அறிவித்து.

புதிதாக கட்டப்பட்டுள்ள பாராளுமன்ற கட்டடத்தை வருகின்ற மே 28ஆம் திகதி பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்கிறார்.

இந்நிலையில், குடியரசு தலைவருக்கு அழைப்பு விடுக்காதது, இந்து தேசியவாதி வி. டி. சாவர்க்கரின் பிறந்த தினமான மே 28-ஆம் திகதி புதிய பாராளுமன்ற கட்டடம் திறக்கப்படுவது உள்ளிட்ட காரணங்களை சுட்டிக்காட்டி எதிர்க்கட்சிகள் மத்திய அரசை கடுமையாக விமர்சித்தன.

இதனைத் தொடர்ந்து, பாராளுமன்ற கட்டடத் திறப்பு விழாவை புறக்கணிப்பதாக திரிணாமூல் காங்கிரஸ், ஆம் ஆத்மி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ராஷ்டிரிய ஜனதா தளம் உள்ளிட்ட 19 கட்சிகள் தெரிவித்திருந்தன.

இந்நிலையில், பாராளுமன்றக் கட்டட திறப்பு விழாவை திராவிட முன்னேற்ற கழகமும் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளது. முன்னதாக, விடுதலை சிறுத்தைகள் கட்சியும் புறக்கணித்து அறிக்கை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சீன அரசு வழங்கிய உரத்தை மலக்கழிவு என சொல்லாதீர்!

## அது கவலைப்படுகிறதாம் என்கிறார் மகிந்த அமரவீர

கொழும்பு, மே 25

**மலக்கழிவு உரம் என சீனாவின் உரத்தை எதிர்க்கட்சியினர் விமர்சிப்பது சீனாவுக்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்துவதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் தன்னிடம் அறிவித்துள்ளதென அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது உரையாற்றிய சஜித், "நீங்கள் விவசாய அமைச்சராக அப்போது இருக்கவில்லை என்றாலும், நீங்கள் அந்த அரசாங்கத்தில் இருந்தீர்கள் என்பதால் இதனை நான் கேட்கிறேன்.

உங்களது அரசாங்கம் சீனாவிலிருந்து உரத்தை இறக்குமதி செய்வதாகக் கூறி மலக்கழிவு உரத்துக்கு டொலர்கள் செலுத்தப்பட்டு அதனை இறக்குமதி செய்திருந்தது. இப்போது மலக்கழிவு உரமும் இல்லை, மலக்கழிவு கப்பலும் இல்லை. இக்கப்பலுக்குச் செலுத்தப்பட்ட பணத்துக்கு என்ன நடந்தது?

இது தொடர்பில் கணக்காய்வு தலைமை அதிபதியால் கணக்காய்வு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த அறிக்கையை வழங்க முடியுமா? அதனைச் சபைப்படுத்த முடியுமா- என வினவினார்.

இந்த கப்பலுக்கு பணத்தை செலுத்தியது யார்? எந்த அடிப்படையில் இந்த பணம் செலுத்தப்பட்டது என்பதை பாராளுமன்றத்துக்கு அறிவிக்கவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, இந்த கப்பல் தொடர்பில் பல தடவைகள் பாராளுமன்றத்தில் பேசப்பட்டுள்ளன. சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட




உரத்தை மலக்கழிவு உரம் எனக் கூறுவது பொருத்தமற்றது. நீங்களும் சீனாவுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருகிற நிலையில், மலக்கழிவு என இதனை விமர்சிப்பது தமக்கு வருத்தமளிப்பதாக சீனத் தூதரகம் என்னிடம் தொடர்ந்து கூறியது-என்றார். (அ)

# கடலில் குதித்து உயிர் மாய்க்க முயற்சித்த சீனப் பிரஜை கைது

கொழும்பு, மே 25

காலி வெளிச்ச வீட்டுக்கு அருகில் மதில் மேல் ஏறிக் கடலில் குதித்து தற்கொலை செய்து கொள்ள முயற்சித்த சீனப் பிரஜையை காலி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சீனப் பிரஜை காலி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டு எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

33 வயதான ஹங்ஜின் என்ற சீன இளைஞரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கைக்கு சுற்றுலா வந்தவர் எனவும் அவரது விஸா அனுமதிக் காலம் முடிவடைந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

சீனப் பிரஜையின் காதலி அவரை கைவிட்டுச் சென்றதன் காரணமாக துக்கத்தில் அவர் தற்கொலை செய்துக்கொள்ள முயற்சித்துள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)

# தயாசிறிக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு

கொழும்பு, மே 25

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தன்னைத் தாக்க முயற்சித்து கொலை அச்சுறுத்தல் விடுத்தார் என அந்தக் கட்சியின் ஊடகப் பிரிவின் அதிகாரி ஒருவர் கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தின் பின்னர் இந்த சம்பவம் நடந்ததாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ கூறினார்.

கலேன்பிந்துனுவெவ பிரதேசத்தை சேர்ந்த 37 வயதான நபரே முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

தயாசிறி ஜயசேகர தன்னைத் தாக்க முயற்சித்தபோது அருகில் இருந்தவர்கள் அதனை தடுத்ததாக முறைப்பாட்டாளர் கூறியுள்ளார்.

கறுவாத்தோட்டம் பொலிஸார் முறைப்பாடு குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# போதைப்பொருள்கள் கடத்திய முன்னாள் சிப்பாய் சிக்கினார்!

கொழும்பு, மே 25

இராணுவ அடையாள அட்டையைப் பயன்படுத்தி ஐஸ், ஹெரொயின் மற்றும் பிரீகாப்லைன் வகையான போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட இராணுவ சிப்பாயை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின்படி, நேற்று முன் தினம் முல்லேரியா வைத்தியசாலைக்கு முன்பாக திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த முல்லேரியா, உடுமுல்லை பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய நபரிடம் 8 கிராம் 150 மில்லிகிராம் ஐஸ், 25 கிராம் 400 மில்லிகிராம் ஹெரொயின், 1,850 பிரீகாப்லைன் மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதுடன் அவர், மேலதிக விசாரணைக்காக முல்லேரியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின்போது, அவர் கடந்த 2020ஆம் ஆண்டு சட்டவிரோதமான முறையில் சேவையில் இருந்து விலகிய இராணுவ சிப்பாய் எனத் தெரியவந்தது.

இராணுவத்தினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டையொன்று அவரிடம் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி 60 கோடி ரூபாவுக்கு மேல் மோசடி!

## பெண் உட்பட இருவர் கைது

கொழும்பு, மே 25

கொழும்பு உலக வர்த்தக நிலையத்தில் ஆறாவது மாடியில் அலுவலகம் ஒன்றை நடத்தி, கனடாவின் கிளிம்ப் பல்கலைக் கழகத்துக்குச் செல்ல கல்வி விஸாவை பெற்றுத் தருவதாகக் கூறி சுமார் 400 பேரிடம் 60 கோடி ரூபாவுக்கும் மேல் மோசடி செய்த பெண் உட்பட இருவரை தலங்கம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாரிடம் சிக்காது தப்பி வந்த இந்த சந்தேக நபர்கள், தாக்குதலுக்கு உள்ளான சம்பவம் தொடர்பாக செய்த முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளை அடுத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

மருத்துவர்கள், பொறியியலாளர்கள், பொலிஸ் அதிகாரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் என இந்த சந்தேக நபர்கள் பலரை ஏமாற்றியுள்ளமை தெரியவந்துள்ளது.

பத்தரமுல்லை பெலவத்த கடவுச்சீட்டு அலுவலகத்துக்கு அருகில் ஒருவர் தம்மை தாக்கியதாக பெண்ணும், ஆணும் தலங்கம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டை விசாரிப்பதற்காக முறைப்பாட்டாளர்களும், தாக்கியதாகக் கூறப்படும் நபரும் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் ராஜகிரிய பிரதேசத்தை சேர்ந்த நபரின் மகனைக் கனடாவின் கிளிம்ப் பல்லைக்கழகத்துக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி 15 லட்சம் ரூபாவை பெற்றுக்கொண்டு அதனைச் செய்யாத காரணத்தினால், அவர் சந்தேக நபர்களை தாக்கியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில் சந்தேக நபர்களான பெண் மற்றும் ஆண் ஆகியோருக்கு எதிராக கொழும்பு மோசடி தடுப்புப் பிரிவில் ஆறு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்ததை அடுத்து அவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேக நபர்கள் நாட்டில் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த 400 இற்கும் மேற்பட்டோரிடம் தலா 15 லட்சம் ரூபா பணத்தைப் பெற்று மோசடி செய்துள்ளனர்.

நுகேகொடை பிரதேசத்தை சேர்ந்த 63 வயதான நபரும், கடுவலை பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதான பெண்ணுமே சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# மதுக் கடைகள் திறந்து மூடும் நேரத்தை அதிகரிக்கவேண்டும்

## டயானா கமகே எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மே 25

மதுவரிக்காக மதுபானக் கடைகள் குறைந்தது காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரையாவது திறந்திருக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே தெரிவித்தார்.

மதுபான கடைகள் இரவு 9 மணிக்கே மூடப்படுவதால் சில பில்லியன் ரூபாய் வருமான இழப்பு ஏற்படுவதாக அவர் பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- அரசாங்கம் மது வரியை விதித்தாலும் மீண்டும் அதை வசூலிக்க எவ்வித வழிகளும் இல்லை. மதுபானத்தை விற்றால் மட்டும் தான் அதை மீள



வசூலிக்க முடியும். மதுபான கடைகள் மற்றும் உணவகங்கள் இரவு பத்து மணிவரையாவது திறந்திருக்கவேண்டும்.

அப்படியே 9 மணிக்கு மதுக் கடைகளை மூடினால் கூட, மதுவை வாங்கவேண்டுமென நினைப்பவர்களுக்கு 9 மணிக்குப் பின் அதை எங்கு எப்படி வாங்கவேண்டும் என்பது தெரியும்-என்றார். (அ)

# சஜித் பிரேமதாஸ சவால்களை ஏற்கக்கூடிய தலைவர் அல்லர்!

## கூறுகிறார் பாலித ரங்கே பண்டார

கொழும்பு, மே 25

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என ஐக்கிய மக்கள் அறிவித்திருந்தாலும் அவர் எப்போதும் சவால்களை ஏற்கும் தலைவர் அல்லர் என ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மெலும் தெரிவிக்கையில்- கடந்த முறை ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்காது யால காட்டில் ஒழிந்துக்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் இம்முறை கொங்கோவில் உள்ள வனாந்தரத்துக்கு செல்ல வாய்ப்புள்ளது.

மக்களின் சரியான நிலைப்பாட்டை அறிந்துகொள்வதற்காக அடுத்த ஆண்டு முதல் மூன்று மாதங்களில் அல்லது நடுப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும்.

இந்த தேர்தலில் சஜித் பிரேமதாஸ போட்டியிட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து நான் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன்.

மக்கள் அந்த தேர்தலில் வீரனுக்கும் கோழைக்குமான போட்டியை காண முடியும்.

ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளவர்கள் சஜித் பிரேமதாஸ சவால்களை ஏற்கும் தலைவர் அல்லர் என்பதை அறிந்துகொண்டுள்ளனர்.

இதனால், அவர்கள் படிப்படியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து வருகின்றனர்-என்றார். (அ)

# ஜனாதிபதி வேட்பாளர் ஜனக ரத்நாயக்கவா?

## மனநோயாளிகளுக்கு வாய்ப்பில்லை என்கிறார் மின்சக்தி அமைச்சர் காஞ்சன

கொழும்பு, மே 25

**ஜனக ரத்நாயக்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாகவும், அதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் கூறியிருக்கிறார். மனநோயாளர்களை ஜனாதிபதி வேட்பாளர்களாக முன்னிறுத்தமுடியாது என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.**

ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்கம் செய்வதற்கான யோசனை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஜனகவுக்கு எதிராக 5 குற்றச்சாட்டுக்கள் உள்ளன. முதல் இரு குற்றச்சாட்டுக்களும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அவர் தொடர்பில் வழங்கியிருந்த தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டது.

ஜனகவுக்கு அரசியல் தீர்மானங்களை மேற்கொள்ளவோ, அரசாங்கத்தால் நியமிக்கப்படும் அமைச்சர்களை நீக்குவதுத்



தொடர்பில் கருத்துத் தெரிவிக்கவோ முடியாது.

2014ஆம் ஆண்டிலிருந்து மின் கட்டணம் திருத்தப்படாமையால் மின்சார சபையும் திறைசேரியும், 9 வருடங்களுக்குப் பின்னர் மின் கட்டணம் திருத்தப்பட்டதால் நுகர்வோரும் பிரச்னைகளுக்கு முகங்கொடுத்தனர்.

மின் கட்டணம் திருத்தப்பட்டப் பின்னர் இலங்கை மின்சார சபை நட்டமடையவில்லை. சுயாதீன ஆணைக்குழுவை நீக்க நடவடிக்கை எடுக்கவில்லை. அரசியல் நோக்கங்களுக்காக, அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்ட, எதிர்க்கட்சியினருக்கு சார்பாக நடந்துகொள்ளும் நபரை நீக்கவே நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பொறுப்புக்கூறும் நிறுவனமாக மாற்றப்பட வேண்டும்-என்றார். (அ)

# சிறுவர்களுக்கான இன்சுலின் மருந்து கொள்வனவுக்கு நிதி




யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தில் நீரிழிவு நோய் வகை ஒன்றுக்கு சிகிச்சை பெற்று வரும் சிறுவர்களுக்கான இன்சுலின் ஊசி மருந்து கொள்வனவுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். நீரிழிவுக் கழகத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக, ஜேர்மனியைச் சேர்ந்த துரைசிங்கம் மோகனதாஸ் ஒரு இலட்சம் ரூபாவும், இலண்டனைச் சேர்ந்த எம்.எம் குடும்பத்தினர் அறுபதாயிரம் ரூபாவும் வழங்கியுள்ளனர்.

இந்த நிதியை, ஜேர்மன் வெற்றி மணி பத்திரிகை நிறுவனத் தலைவர் எஸ்.சிவக்குமார், யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தியிடம் கையளித்தார். (அ)

# ஜனக ரத்நாயக்கவுக்கு ஏன் இப்படி பயப்படுகின்றீர்கள்?

## சபையில் ஹக்கீம் கேள்வி

கொழும்பு, மே 25

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவரை இன்றைய விவாதத்தைப் பார்க்க ஏன் அனுமதிக்கவில்லை. எதற்காக இவ்வளவு பயப்படுகிறீர்கள் என முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பினார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்,

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க, தன்னைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான யோசனை மீதான விவாதத்தைப் பார்வையிட பாராளுமன்றத்துக்கு வரு



வதற்கு அனுமதியை கோரியிருந்தார்.

இதற்கு, பாராளுமன்ற கலரி இன்றைய தினம் (நேற்று) மூடப்பட்டிருக்குமென சபாநாயகர் அறிவித்திருந்தார். ஆனால், பாடசாலை மாணவர்கள் தற்போது கலரியில் அமர்ந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. இந்தளவு பயப்பட வேண்டுமா?-என்றார்.

# ஜனாதிபதி, அரசு, அமைச்சரவை மாறினாலும் செலுத்தவேண்டிய கடனில் மாற்றம் கிடையாது

## பந்துல குணவர்தன சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 25

அரசாங்கம் மாறினாலும் ஜனாதிபதிகள் மாறினாலும் அமைச்சரவை மாறினாலும் செலுத்தவேண்டிய கடன் தொகையில் எந்த மாற்றமும் ஏற்படாது என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு அரசாங்கம் அரசின் உத்தியோகபூர்வ இலச்சினையுடன் கடனைச் செலுத்த உறுதி வழங்கியுள்ளது.

தனிநபர் கடன் அதிகரித்துள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கூறியுள்ளனர்.



அதனைக் கூறப் பேராசிரியர்கள் தேவையில்லை. மூன்றாம் வகுப்பு பிள்ளைக்கும் அது புரியும்.

இலக்கங்களுக்கு அமைய கடன் சுமையில் இருந்து எப்படி தப்பிப்பது என்பதையே பேராசிரியர்கள் கூறவேண்டும்.

மூன்றாம் வகுப்பு பிள்ளைக்கு புரிந்த விடயத்தை பத்திரிகைகளில் செய்திகளாக வழங்குவது பேராசிரியர்களின் கடமையல்ல.

இலங்கையில் நிதியியல் ஆலோசர்கள் இல்லை என்பதால், நாங்கள் சர்வதேசத்திற்குச் சென்று கடனை மறுசீரமைக்க பிரான்ஸ் நாட்டின் லாஸ்ட் நிறுவனத்தை தெரிவு செய்துள்ளோம்.

தேசிய நெருக்கடியில் இருந்து மீள இலங்கையில் பேராசிரியர் ஒருவர் இருப்பாரேயானால், அது உலகம் என்ற ரீதியில் புகழ் என்பதுடன் பரலோகம் என்ற வகையில் புண்ணியம்-என்றார்.

# தங்கம் கடத்திய அலி சப்ரிக்கு அனுமதி ஜனகவுக்கு தடை; இதுவா 'சிஸ்டம் சேஞ்'?

## சபையில் சஜித் பிரேமதாஸ கேள்வி

கொழும்பு, மே 25

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவின் குடும்பத்தினர் பாராளுமன்ற கலரிக்கு வரத் தடை விதித்துள்ளனர். ஆனால், வெளிநாட்டிலிருந்து திருட்டுத்தனமாக தங்கத்தைக் நாட்டுக்குள் கடத்திக்கொண்டுவந்த பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், இன்று (நேற்று) சபைக்கு வந்து வாக்களிக்கவுள்லார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதுவா சிஸ்டம் சேஞ் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனக ரத்நாயக்க மீதான இன்றைய விவாதத்தின் போது, பாராளுமன்ற உறுப்பினர்கள் ராஜபக்ஷக்கள் பக்கமா? நாட்டின் பொதுமக்கள் பக்கமா அல்லது நீதியின் பக்கமா? அநீதியின் பக்கமா நிற்போகிறீர்கள் என்பதை தெரிவு செய்துகொள்ளுங்கள்.



ஜனக பற்றி பேசுவதற்குப் பதிலாக அவர் செயற்பட்டது யாருக்காக? அவர் என்ன செய்தார் என்பதையே பார்க்கவேண்டும். வாக்களிக்கும்போது ஒவ்வொருவரின் பெயரைக் குறிப்பிட்டு வாக்களிக்கவேண்டும். நாட்டு மக்கள் பக்கம் யார் இருக்கிறார்கள் என்பதை மக்கள் தெரிந்துகொள்ளவேண்டும்-என்றார். (அ)

# பொதுப் பயன்பாடு ஆணைக்குழு சுயாதீனமான ஆணைக்குழுவல்ல!

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறுகிறார்

கொழும்பு, மே 25

அரசியலமைப்புச் சபையில் குறிப்பிடப்பட்டுள்ள சுயாதீன ஆணைக்குழுக்களின் கீழ் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு உள்ளடக்கப்படமாட்டாது என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்கம் செய்வதற்கான பிரேரணையை முன்வைத்து உரையாற்றும்போதே சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு கூறினார்.

பொதுப் பயன்பாடுகள் சட்டம் தனியான சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டதாகவும் இது பொதுப் பயன்பாட்டு சேவை



கள் மற்றும் ஒழுங்குமுறை ஆணைக்குழுவாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதன் மூலம் இந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# கோட்டாபயவின் பணியாளர்களுக்கும் தொடர்ந்து சம்பளம் வழங்கும் ரணில்!

கொழும்பு, மே 25

**முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பதவி விலகியபோதிலும் ஜனாதிபதி அலுவலகத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட 'சிறப்பு செயற்திட்டங்கள்' என்ற பிரிவின் கீழ் அவரது தனிப்பட்ட ஊழியர்கள் பணியில் இணைக்கப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.**

கோட்டாபய ராஜபக்ஷ தனது முழு பதவிக்காலத்தை நிறைவு செய்யாதபோதிலும், பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்திய அவரது தவறான நிர்வாகத்தின் காரணமாக ராஜினாமா செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டாலும், ராஜபக்ஷவின் முன்னாள் பிரத்தியே செயலாளர் சுகீஸ்வர பண்டார உட்பட கோட்டாவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்கள் தற்போதும் ஜனாதிபதி அலுவலகத்தில் உள்ள சிறப்பு திட்டப் பிரிவு என்ற பெயரில் அரசிடமிருந்து சம்பளம் மற்றும் சலுகைகளைப் பெறுகிறார்கள் என்ற தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோட்டாபய ஜனாதிபதியாக இருந்தபோது அவரின் பிரத்தியேக செயலாளராக இருந்த சுகீஸ்வர பண்டார விசேட திட்டப் பிரிவின் பணிப்பாளர் நாயகமாகச் செயற்பட்டு வருகின்றார். அவரின் கீழ் தனிப்பிரிவாக அந்தக் குழு செயற்பட்டு வருகிறது.

ஜனாதிபதி அலுவலகத்தில் விசேட திட்டப் பிரிவு ஒரு 'அலகு' எனவும், கொழும்பிற்கு வெளியே இடம்பெறும் சில செயற்திட்டங்களை ஒருங்கிணைத்து ஜனாதிபதியின் ஊழியர்களுடன் தொடர்பை ஏற்படுத்தவும் அதன் ஊழியர்கள் பணிக்கப்பட்டுள்ளனர் எனவும் ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# ஜூன் 12 இற்கு முன்னர் மாணவருக்கு சீருடை

கொழும்பு, மே 25

இந்த வருடத்திற்கான பாடசாலை மாணவர்களுக்கான சீருடை விநியோகத்தை எதிர்வரும் ஜூன் 12 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

முதலாம் கட்டத்தின் கீழ் சீனாவில் இருந்து பெறப்பட்ட சீருடைத் துணிகள், வடக்கு, கிழக்கு, வட மேல் மற்றும் மத்திய மாகாண பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

உள்நாட்டு விநியோகஸ்தர்களிடம் இருந்து 38 இலட்சத்து 31 ஆயிரம் மீற்றர் சீருடைத்துணிகள் பெறப்பட்டுள்ளன.

இவற்றில் 95 வீதமானவை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள நிலையில், எஞ்சியுள்ள 27000 மீற்றர் சீருடைத் துணிகள், இறுதிக்கட்டமாக காலி, களுத்துறை, சிலாபத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

பாடசாலை சீருடைத்துணிக்கான தேவை 1 கோடியே 26 இலட்சத்து 94 ஆயிரம் மீற்றராக காணப்படுவதாக கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# ஓடிக்கொண்டிருந்த ஓட்டோ முன் சக்கரம் கழன்று சென்று மோதியதில் பெண் பலி!

கொழும்பு, மே 25

ஓடிக்கொண்டிருந்த ஓட்டோவின் முன் சக்கரம் கழன்று, இரண்டு சிறு பிள்ளைகளை ஏற்றியபடி பெண்ணொருவர் செலுத்திய மோட்டார் சைக்கிள் மீது மோதியதில், பெண் உயிரிழந்ததாக ஹொரணை தலைமையக் பொலிஸார் தெரிவித்தனர்.

பதுவிட்ட குருந்துவத்தையில் வசிக்கும் எச்.பவிதா குமாரி (வயது-36) என்ற திருமணமான பெண்ணே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்த பெண் தனது 13 வயது மகனையும், அவரது மகனின் நண்பர் ஒருவரையும் மேலதிக வகுப்புகளுக்கு மோட்டார் சைக்கிளில் கொனாபொல பதுவிட்ட பகுதியில் இருந்து குளுபான நோக்கி அழைத்துச் சென்றபோது விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஓய்வூதியத்தை உடனடியாக வழங்க முறையான ஏற்பாடு செய்ய உத்தரவு

கொழும்பு, மே 26

ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு உடனடியாக ஓய்வூதியம் வழங்குவதற்கான முறையான திட்டத்தைத் தயாரிக்க ஓய்வூதியத் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

துறைசார் கண்காணிப்புக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ராரச்சி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஓய்வூதியம் பெறுவதற்கு நீண்ட கால அவகாசம் எடுத்துக் கொள்வதால் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

விண்ணப்பங்களை உரிய முறையில் பூர்த்தி செய்யாததால் ஓய்வூதியம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக ஓய்வூதியத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஓய்வூதியத் திணைக்களம் தொடர்பில் மக்கள் மத்தியில் விரக்தி நிலவும் அதேவேளை ஓய்வூதியம் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு சரியான வழிமுறைகள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மக்களுக்கு இலகுவாக சேவைகளை வழங்குமாறு ஜகத் குமார சுமித்ராரச்சி பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# தமிழ்த் தலைவர்கள் தமது அதிகாரத்தை இழந்தபோது இனவாதத்தை விதைத்தனர்

## கூறுகிறார் அனுரகுமார திஸாநாயக்க

கொழும்பு, மே 25

பாரம்பரிய தமிழ்த் தலைவர்கள் தமது அதிகாரத்தை இழந்தபோது இனவாதத்தை விதைத்தனர் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

குருநாகல் மாவட்ட ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களின் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



பல ஆண்டுகளாக அரசியல்வாதிகள் நாட்டில் இனவாதத்தை விதைத்துள்ளனர்.

தமிழ்த் தலைவர்கள் மாத்திரமன்றி தென்னிலங்கைத் தலைவர்களும் இனவாதத்தை விதைத்துள்ளனர்.

தற்போதுள்ள பொருளாதார அமைப்பு, சமூக மற்றும் அரசியல் கலாசாரத்தை மாற்றுவது நாம் எதிர்கொள்ளும் சவாலாகும். நாடு எதிர்கொண்டுள்ள பேரழிவு கடந்த ஆட்சியாளர்களால் ஏற்பட்ட ஒன்று. இந்த நிலையை மாற்ற உறுதியான உறுதியுடன் நாம் தலையிட வேண்டும்-என்றார். (அ)

# அலி சப்ரி ரஹீமினால் கொண்டு வரப்பட்ட தங்கம் உள்ளிட்ட பொருட்கள் அரசுடைமை



கொழும்பு, மே 25

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமினால் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட தங்கம் உள்ளிட்ட அனைத்து பொருட்களும் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

3.5 கிலோகிராம் தங்கம் மற்றும் 91 கையடக்க தொலைபேசிகளே இவ்வாறு அரசுடைமையாக்கப்பட்டுள்ளதாக பதில் நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

குறித்த தங்கம் மற்றும் கையடக்க தொலைபேசிகளின் மொத்த பெறுமதி 8.5 கோடி ரூபாவுக்கும் அதிகமென மதிப்பிடப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் நேற்று முன் தினம் முற்பகல் டுபாயிலிருந்து நாடு திரும்பியபோது, தங்க பிஸ்கட்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளுடன் சுங்கப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 6 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அடையாளம்

கொழும்பு, மே 25

நாட்டின் 61 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள், டெங்கு அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த சில தினங்களுடன் ஒப்பிடுகையில், அவற்றுள் 15 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் சமூக வைத்திய நிபுணர், வைத்தியர் லஹிரு கொடித்துவக்கு தெரிவித்தார்.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 36560 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.



மொத்த நோயாளர்களில் 50 வீதமானோர் மேல் மாகாணத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் 8200 நோயாளர்களும் கொழும்பு மாவட்டத்தில் 7600 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மொத்த நோயாளர்களில் 25 வீதமானோர் 5 முதல் 19 வயதுக்குட்பட்டவர்கள் என தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# பணிப்பெண் ராஜகுமாரி மரணம் குறித்து அரசு தரப்புடன் மனோ கடும் வாக்குவாதம்

## சஜித், விமல் மனோவுக்கு ஆதரவாக குரல்



கொழும்பு, மே 25

பிரபல கலைஞர் சுதர்மா ஜயவர்தன வீட்டில் பணி செய்த பதுளையை சேர்ந்த ராஜ்குமாரியின், சடலத்தை மீண்டும் வெளியெடுத்து, மறு பிரேத பரிசீலனைக்கு உத்தரவிட வேண்டுமென்றும், அந்த பரிசீலனையை பேராதெனிய பல்கலைக்கழக மருத்துவ பீடத்திடம் ஒப்படையுங்கள் என்றும், தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் நேற்று சபையில் வாதிட்டார்.

இவ்வேளையில் அரசு தரப்பினர் கூச்சல் எழுப்பி மனோ எம்.பியை பேச விடாமல் தடுத்தனர்.

இந்நிலையில் மனோ எம்.பிக்கு ஆதரவாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, விமல் வீரவன்ஸ ஆகியோர் வாதிட்டனர்.

இறுதியில் பிரதமர் தினேஷ் குணவர்தன எழுந்து, மனோ எம்.பியின் கோரிக்கையின்படி மறு பிரேத பரிசீலனையை நடத்த நீதிமன்றத்தை நாடும்படி பொலிஸ் திணைக்களத்தைப் பணிப்பதாக உறுதியளித்தார். (அ)

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்க்கு ‘உரிமையாளர்’ யார்? என்ன பிரச்னை?

முரளிதரன் காசிவிஸ்வநாதன்




இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புத்தக நிறுவனமான நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் பெரும்பான்மைப் பங்குகளை யார் வைத்திருப்பது என்பது குறித்து பெரும் சர்ச்சை எழுந்துள்ளது. ஆனால், புத்தக நிறுவனம் கட்சிக்கு கட்டுப்பட்டதல்ல என்கிறார்கள் நிர்வாகத்தினர். இந்த விவகாரத்தில் என்ன நடந்துகொண்டிருக்கிறது?

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பதிப்பகப் பிரிவாக அறியப்படும் நிறுவனம் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னையில் தலைமையகத்தைக் கொண்டிருக்கும் இந்த நிறுவனத்திற்கு தமிழ்நாடு முழுவதும் 20 கிளைகள் உள்ளன. இதன் துணை நிறுவனமாக பாவை பிரிண்டர்ஸ் செயல்படுகிறது. ஆயிரக்கணக்கான புத்தகங்களை இந்த நிறுவனம் இதுவரை வெளியிட்டிருக்கிறது.

தற்போது இந்த நிறுவனத்தின் பெரும்பான்மை பங்குகளை யார் வைத்திருப்பது என்பது தொடர்பாகவும் யார் அதனைக் கட்டுப்படுத்துவது என்பது குறித்தும்தான் பிரச்சனை எழுந்துள்ளது. அரசியல் கட்சிகள் பதிப்பகங்களை நடத்தும்போது, அந்தக் கட்சியின் ஒரு பிரிவாகவே அந்தப் பதிப்பகம் நடத்தப்படும். அல்லது கட்சித் தலைவர்களை அறங்காவலர்களாகக் கொண்ட அறக்கட்டளைகள் மூலம் அந்த பதிப்பகம் நடத்தப்படும்.

திராவிடர் கழகத்தின் விடுதலை நாளிதழ், தி.மு.கவின் முரசொலி, சி.பி.எம்மின் பாரதி புத்தகாலயம் ஆகியவை இந்த பாணியிலேயே நடத்தப்படுகின்றன.

ஆனால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பதிப்பகமான நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் எனப்படும் என்.சி.பி.எச், துவங்கும்போதே ஒரு பிரைவேட் லிமிட்டெட் நிறுவனமாகத் துவங்கப்பட்டது. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டெட் என்ற இந்த நிறுவனத்தின் பெரும்பான்மைப் பங்குகள், தற்போது அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக உள்ள சண்முக சரவணன் வசம் உள்ளன.

ஆனால், தனி நபர் ஒருவரிடம் பெரும்பான்மைப் பங்குகள் இருப்பதை விரும்பாத கட்சி அமைப்பு, அந்தப் பங்குகளை கட்சி நிர்வாகிகளுக்கு மாற்றித் தரச் சொல்லிக் கேட்கிறது. அதற்கு சண்முக சரவணன் மறுக்கவே விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது.



### நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் பின்னணி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கான பத்திரிகையாக 1937 முதல் ஜனசக்தி வெளியான நிலையில், அந்தப் பெயரிலேயே புத்தகங்களும் வெளிவந்துகொண்டிருந்தன. இந்தியா சுதந்திரமடைந்த பிறகு, கட்சிக்கென வெற்றிகரமாகச் செயல்படக்கூடிய பதிப்பகம் தேவை என்பது உணரப்பட்டது. இதையடுத்து, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் என்ற பெயரில் ஒரு பதிப்பகம் உருவாக்கப்பட்டது. ஆனால், அதனை கட்சியின் ஒரு அங்கமாக அல்லாமல், பிரைவேட் லிமிட்டெட் நிறுவனமாகவே நடத்துவதுதான் சிறப்பானதாக இருக்கும் என முடிவுசெய்யப்பட்டது. அதன்படி, 1951ஆம் ஆண்டு ஜூன் 1ஆம் தேதி இந்த நிறுவனம் பதிவுசெய்யப்பட்டது.

நிறுவனம் துவங்கப்பட்டபோது கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்கள் ஜீவா, பி. ராமமூர்த்தி உள்ளிட்ட நான்கு பேர் பங்குதாரர்களாகவும் இயக்குநர்களாகவும் இருந்தனர். ராமகிருஷ்ண மூர்த்தி என்பவர் முழுநேர நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டார். அவருக்கும் பங்குகள் ஒதுக்கப்பட்டன. நிர்வாக இயக்குநரின் தலைமையில் ஒரு தனியார் நிறுவனமாக நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் செயல்பட ஆரம்பத்தது.

சோவியத் யூனியன் காலகட்டத்தில், கட்சிக் கொள்கைகளைப் பரப்ப புத்தகங்களை தமிழிலேயே ரஷ்யாவில் அச்சடித்து தமிழகத்தில் விற்பனை செய்ய விரும்பியபோது, விநியோகப் பொறுப்பு என்சிபிஎச்சுக்கு வழங்கப்பட்டது. அந்த காலகட்டத்தில் என்.சி.பி.எச் தமிழ்நாட்டின் மிகப் பிரபலமான புத்தக நிறுவனமாக உருவெடுத்தது.

சோவியத் ரஷ்யாவிலிருந்து வந்த வண்ண மயமான குழந்தைகள் நூல்களும் அறிவியல் புத்தகங்களும் என்.சி.பி.எச்சின் பெயரை வீடு தோறும் கொண்டு சேர்த்தன. சோவியத் யூனியன் நொறுங்கி, அங்கிருந்து புத்தகங்கள் வெளிவருவது நின்றுபோன நிலையில், பாடப் புத்தகங்களின் திசையில் கவனம் செலுத்த ஆரம்பித்தது என்.சி.பி.எச்.

தற்போது பல பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் தேவையான புத்தகங்களை அச்சிடுவது, வெளியிடுவது என ஆண்டுதோறும் 20 கோடி ரூபாய் அளவுக்கு விற்று



முதல் செய்கிறது இந்த நிறுவனம். பொதுவுடமை சார்ந்த நூல்களும் பொது நூல்களும் குறிப்பிடத்தகுந்த எண்ணிக்கையில் வெளியிடப்படுகின்றன.

இந்த நிறுவனத்தில் பங்குதாரராக உள்ள யாராவது ஒருவர் இறந்தாலோ, கட்சியை விட்டு விலகினாலோ அந்தப் பங்குகள் மற்றொருவருக்கு மாற்றிக்கொடுக்கப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது.

தற்போது என்சிபிஎச்சின் இயக்குநர்களாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரான நல்லகண்ணு, அக்கட்சியின் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டச் செயலாளர் வீரசேனன், கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன், கல்விப் பிரிவின் பொறுப்பாளரும் மாநிலச் செயற்குழு உறுப்பினருமான கா. சந்தானம், எழுத்தாளர் ஸ்டாலின் குணசேகரன், நிர்வாக இயக்குநராக சண்முக சரவணன் ஆகியோர் உள்ளனர்.

இந்த நிலையில், கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தா. பாண்டியன், நல்லகண்ணு ஆகியோர் வசம் உள்ள பங்குகள் சண்முக சரவணன் பெயருக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. ஆனால், இப்படி மாற்றப்பட்டது முறையல்ல எனக் கருதும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள், சண்முக சரவணன் தன்வசம் உள்ள பங்குகளை கட்சி கூறும் நபருக்கு மாற்றிக்கொடுக்க வேண்டுமென கூறுவதாக சமூக வலைதளங்களில் சில நாட்களுக்கு முன்பாக தகவல்கள் வெளியாக ஆரம்பித்தன.

இதையடுத்து சண்முக சரவணன் தரப்பின் சார்பில் பலருக்கு மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டன. அந்த மின்னஞ்சலில் ‘நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் ஒரு பிரைவேட் லிமிடட் நிறுவனமாக இயங்குவதுதான் அதன் தன்மைக்கு உகந்தது என்ற ஓர்மை உணர்வோடும் தொலைநோக்கோடும் அதனைக் கட்டி எழுப்பியவர்கள் அவ்வாறு அதனைப் பதிவு செய்தனர்.

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் பங்குகளை வைத்து சுயலாபம் பெறவோ, மற்றவர்களுக்கு விற்கவோ, வாரிசுதாரர்கள் அடையவோ முடியாத அளவிற்கு விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. பல கட்டங்களில் அடுத்தடுத்து வந்த இயக்குநர்கள், நிர்வாகிகள் பெயரில் பங்குகள் மாற்றிக் கையளிக்கப்படுவதும் நிர்வாகமும் இயக்கமும் தொடர்ச்சி அறாமல் மக்கள் பணியாற்றியதுமே வரலாறு. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பிளவுண்டபோதும் கூட இந்த நடைமுறையும் தொடர்ச்சியும் பிரச்சினையில்லாமல் தொடர்ந்தது.

அந்த அளவிற்கு நிறுவனத்தின் கூட்டமைப்பு ஷரத்துகளும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் வரையப்பட்டு, இந்த மரபு தொடர்ந்துள்ளது. கட்சித் தலைவர்களாகவும், நிர்வாக வாரிய உறுப்பினர்களாகவும், பிரைவேட் லிமிடெட் என்பதற்கான இலக்கணப்படி பங்குதாரர்களாகவும் இருப்பவர்களும் இதுவரை நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் தினசரி நிர்வாக செயல்பாடுகளில் தலையிட்டதில்லை.

நியூசெஞ்சுரி புத்தக நிறுவனமோ, பணியாளர்களோ இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக ஒருபோதும் செயல்பட்டதில்லை. இன்றைக்கும் செயல்படவில்லை. அதற்கான அவசியமும் இல்லை.

75 வயதிற்கு மேல் கட்சி பொறுப்புக்கு வர முடியாது என்ற முடிவு அண்மையில் தேசிய மாநாட்டில் எடுக்கப்பட்டது. அப்படி ஓய்வு பெறுவதற்கு விருப்பம் இல்லாத சிலர் ஓய்வுகால சரணாலயமாக நியூ செஞ்சரி புத்தக நிறுவனத்தை பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்பது தான் தற்போதைய பிரச்சனை.

பங்குகளை சிலரின் பெயருக்கு மாற்றவும் இயக்குநராக நியமிக்கவும் தற்போது உள்ள நிர்வாகிகள் மிரட்டப்படுகின்றனர். காவல்துறை பயன்படுத்தப்படுகிறது. பொய் வழக்கு போடப்படுகிறது. பொறுப்புக்கு வர ஆசைப்படுகின்றவர்கள் நிறுவனத்தின் தொடர்ச்சியான இயக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் பொருத்தம் இல்லாதவர்கள். அவர்கள் சுயநலத்தின் காரணமாகத்தான் நிறுவனத்தில் அதிகாரம் செலுத்த முயல்கின்றனர் என்பதால் தா. பாண்டியன், ஆர் நல்லகண்ணு ஆகியோர் தங்கள் பெயரிலுள்ள பங்குகளை மேலாண்மை இயக்குனர் சண்முக சரவணன் பெயருக்கு மனமுவந்து எழுதி கொடுத்துள்ளனர். ஆனால் அவர்களை ஏமாற்றி சதி செய்து வாங்கியதாக தரம் தாழ்ந்து குற்றம் சாட்டப்படுகிறது,” என்று கூறப்பட்டிருந்தது.

இந்தப் பிரச்சனை முற்றிய நிலையில், சென்னை அம்பத்தூரில் உள்ள அந்தப் பதிப்பகத்தின் அலுவலகத்தில், கட்சியைச் சேர்ந்த சிலர் சென்று பங்குகளை மாற்றித்தர வேண்டுமென சத்தம்போட்டதாக சண்முக சரவணன் தரப்பினர் கூறுகின்றனர். மேலும் காவல் துறையிலும் சண்முக சரவணன் மீது புகார் அளிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

தற்போது சண்முகம் சரவணன் தலைமறைவாகியிருக்கும் நிலையில், அவரது சார்பில் பேசியவர்கள், “தற்போது நியூ செஞ்சுரி புக் ஹவுசில் 300 பேர் பணியாற்றுகின்றனர். அதன் மற்றொரு நிறுவனமான பாவை பிரிண்டர்ஸில் 100 பேர் வரை பணியாற்றுகின்றனர். இந்த நிறுவனத்தைப் பொறுத்தவரை, நிறுவனத்திலிருந்து கிடைக்கும் லாபத்தை பங்குதாரர்கள் எடுத்துக்கொள்ள முடியாது. அது மீண்டும் முதலீடுதான் செய்யப்படும். இதில் பணியாற்றுபவர்கள் மூலம் கட்சிக்கு லெவியாக ஒரு தொகை அனுப்பப்படும்.

கட்சியின் நேரடிக் கட்டுப்பாட்டில் என்.சி.பி.எச் இருப்பதில்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்தப் பதிப்பகத்திற்கு ஆணையிட முடியாது. என்சிபிஎச் மீது கட்சியின் சித்தாந்தரீதியான பிடியை வைத்துக்கொள்ளலாம். இது கட்சிக்கு கடமைப்பட்டுள்ள நிறுவனமே தவிர, கட்சி கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனம் அல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மூத்த தலைவர்களிடமிருந்து மிரட்டி எழுதி வாங்கியதாக புகார் சொல்கிறார்கள். அப்படிச் செய்ய முடியுமா? மேலும், அப்படி எழுதிக் கொடுத்த பிறகும் நல்லகண்ணு பல முறை நிறுவனத்திற்கு வந்திருக்கிறார். அதன் செயல்பாட்டை புகழ்ந்திருக்கிறார். மிரட்டி எழுதி வாங்கியிருந்தால் அப்படிச் செய்திருப்பாரா?” என்கிறார்கள்.

இந்த விவகாரம் குறித்து, என்சிபிஎச்சின் இயக்குநர்களில் ஒருவரும் இந்திய கம்யூன்ஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினருமான கா. சந்தானத்திடம் கேட்டபோது, “றுவனத்தின் நிர்வாக இயக்குனரான சண்முக சரவணன், அந்த நிறுவனத்தை கம்பனி சட்டப்படி நடத்த நினைக்கிறார். ஆனால், நாங்கள் அது கட்சியின் ஸ்தாபனம் எனக் கருதுகிறோம். அவர் இதனை ஒப்புக்கொண்டு, வந்துவிடுவார் எனக் கருதுகிறோம். இதைத் தவிர இந்த சந்தர்ப்பத்தில் வேறு எதையும் நான் சொல்ல விரும்பவில்லை,” என்றார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாரன முத்தரசனிடம் கேட்டபோது, “இந்தப் பிரச்சனையைப் பேசித் தீர்த்துவிடலாம் என்று கருதுகிறோம். இதனை மேலும் மேலும் பெரிதாக்கத் தேவையில்லை,” என்று மட்டும் குறிப்பிட்டார்.

தற்போது இந்த விவகாரம் குறித்து இரு தரப்பும் இந்த வார இறுதியில் பேசவுள்ளதாகத் தெரிகிறது. ஒரு சுமூக முடிவு எட்டப்படும் என பதிப்பக பொறுப்பில் உள்ளவர்களும் கட்சியின் மூத்த தலைவர்களும் நம்புகின்றனர்.

(பிபிசி)

# மியன்மார் இராணுவ ஆட்சி: மௌனம் காக்கும் உலகம்!

சமீபத்தில் தாக்கிய மோக்கா புயல் மிக அதிகமான பேரழிவை மியான்மரில் ஏற்படுத்தியிருக்கிறது. மே 14-ஆம் தேதி பலரை பலிவாங்கி பேரழிவை ஏற்படுத்திய மோக்கா புயலைவிட, மியான்மரின் ராணுவ ஆட்சியாளர்கள் நடத்திய கொடூரங்கள்தான் சகிக்கவொண்ணாதவை.

மோக்கா புயலால் தாக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு அளித்து நிவாரணம் தர வேண்டிய அரசு, அந்தப் பேரிடரை சாதகமாக்கி அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தியது என்பதுகூட வெளியுலகுக்குத் தெரியாமல் மறைக்கப்பட்டிருக்கிறது. மியான்மரின் சகேய்ங் பகுதி, ராணுவத்துக்கு எதிரான பெரும்பாலான போராளிகள் காணப்படும் இடம். மாண்டலேக்கு வடமேற்கிலுள்ள அந்தப் பகுதியில் ஆங்சான் சூகியின் ஜனநாயகத்துக்கான தேசிய கட்சித் தலைவர்கள் மட்டுமல்லாமல், கலைக்கப்பட்ட தேசிய ஒற்றுமை அரசின் போராளிப்படையினரும் அதிக அளவில் இருக்கிறார்கள்.

மியான்மரிலிருந்து கசியும் தகவல்களின்படி கனி, கின்வூ நகரங்களிலிருந்து மோக்கா புயல் தாக்குவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு பல போராளிகள் வெளியேற எத்தனித்தனர். புயல் வீசப் போகிறது என்பது தெரிந்தே ராணுவம் தனது தாக்குதலைத் தொடங்கியது.

ஏறத்தாழ 20,000 பேர் அந்தப் பகுதியிலிருந்து புயலையும் பொருட்படுத்தாமல் வெளியேறி தப்பித்தனர். அதே அளவிலான மக்கள் ராணுவத்தின் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு உள்ளானார்கள். மோக்கா புயல்தான் ராணுவத்தின் தாக்குதலுக்கு முற்றுப்புள்ளி வைத்தது எனலாம்.

இதுபோன்ற ராணுவத்தின் தாக்குதல்கள் மியான்மருக்குப் புதிதல்ல. கடந்த மார்ச் 6-ஆம் தேதி ஜெனீவாவில் கூடிய 52-ஆவது ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் கூட்டத்தில், ஐ.நா.வின் மனித உரிமை ஆணையர் ஓல்கர் டுர்க், இது குறித்து கவலை தெரிவித்தார். ராணுவம் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிய இரண்டாவது ஆண்டில் பொதுமக்கள் மீதான வான்வழித் தாக்குதல்கள் 141 வீதம் அதிகரித்திருப்பதாகத் தெரிவித்தார். பொதுமக்கள் மீது மட்டுமல்லாமல் மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், வழிபாட்டுத் தலங்கள் என்று எதையும் விட்டுவைக்காமல் குண்டு வீசப்படுகிறது என்கிற திடுக்கிடும் தகவல் அவரால் வழங்கப்பட்டது.



மார்ச் 17-ஆம் தேதி ஐ.நா. சபையின் மியான்மருக்கான சிறப்பு பிரதிநிதி நூலின் ஹெய்ஸர் மீண்டும் ராணுவம் முழுமையாக ஆட்சியைக் கையிலெடுத்த பிறகு மியான்மரில் நிலைமை முன்பு இருந்ததைவிட மோசமாக இருக்கிறது என்று 193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பொதுச் சபையில் தெரிவித்தார். 2023 பிப்ரவரி 1-ஆம் தேதி அவசர நிலை நீட்டிப்பிற்குப் பிறகு ராணுவத் தாக்குதல்களின் கடுமை அதிகரித்திருப்பதாகவும், குண்டு வீசுதல், பொதுமக்களின் சொத்துகளை தீக்கிரையாக்குதல் உள்ளிட்ட பல



மனித உரிமை மீறல்கள் மியான்மரில் அரங்கேறுவதை அவர் எடுத்துரைத்தார்.

மியானமர் ராணுவ ஆட்சியாளர்களின் செயல்பாடுகள் ஆச்சரியப்படுத்தவில்லை. ஆனால், ஜனநாயக நாடுகள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் மேற்கு வல்லரசுகளின் செயல்பாடுகள்தான் வியப்பாக இருக்கிறது.

பிப்ரவரி மாதம் மியான்மர் ராணுவத் தளபதிகள் 16 பேருடைய சொத்துகளை முடக்கி, அவர்களின் பயண உரிமையை ரத்து செய்தது ஐரோப்பியக் கூட்டமைப்பு. ஏற்கெனவே 93 நபர்கள், 18 நிறுவனங்கள் மீது அது தடை விதித்திருக்கிறது. தடை விதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவித நிதியுதவியையும் ஐரோப்பியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் வழங்கக் கூடாது என்று உத்தரவும் பிறப்பித்திருக்கிறது.





தடைகள் விதிக்கப்பட்டாலும் சீனாவும் ரஷ்யாவும் மியான்மரின் ராணுவ ஆட்சியாளர்களுக்கு ஆதரவு அளிப்பதால், பெரிய அளவிலான பாதிப்பை அவர்கள் எதிர்கொள்வதில்லை. மீண்டும் ராணுவப் புரட்சி ஏற்பட்டு இரண்டு ஆண்டுகளாகியும், ராணுவத் தளபதிகளின் ஆசியுடன் இயங்கும் நூற்றுக்கணக்கான நிறுவனங்களும், தனிநபர்களும் எந்தவிதத் தடையையும் எதிர்கொள்ளாமல் வழக்கம்போல செயல்படுகிறார்கள். ஆசிய, ஐரோப்பிய நாடுகளில் உள்ள பல நிறுவனங்களிடமிருந்து மியான்மருக்கு பெட்ரோல், டீசல் கிடைக்கிறது. அதை பொதுமக்கள் மீது வான்வழித் தாக்குதல் நடத்துவதற்கு ராணுவம் பயன்படுத்துகிறது.

கடந்த மார்ச் 24-ஆம் தேதி ஜெட் விமானங்களுக்கான எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகித்த இருவர் மீது அமெரிக்கா நடவடிக்கை எடுத்திருக்கிறது. 80 தனிநபர்கள் மீதும், 30 நிறுவனங்கள் மீதும் தடையும் விதித்திருக்கிறது. பதவிக்கு வந்தவுடன் அமெரிக்க வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த ராணுவத் தளபதிகளின் 1 பில்லியன் டாலர் நிதியை அவர்கள் பயன்படுத்த தடை விதித்து அதிபர் ஜோ பைடன் நடவடிக்கை எடுத்தார். அந்த 1 பில்லியன் டாலரை முடக்கியதற்கு பதிலாக, மியான்மரில் ராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராக நடக்கும் போராளிகளுக்கு பயன்படுத்தியிருந்தால் உதவியாக இருந்திருக்கும். ராணுவத்தை எதிர்கொள்ள பணமும், தளவாடங்களும் இல்லாததால்தான் போராளிகள் திணறுகிறார்கள்.

அமெரிக்காவும், ஐரோப்பியக் கூட்டமைப்பும் உக்ரைனுக்கு அதிக அளவிலான நவீன தளவாடங்களையும் விமானங்களையும்கூட வழங்கி ரஷ்யாவை எதிர்கொள்ள உதவுகின்றன. ஆனால், மியான்மரில் நடக்கும் ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் போராளிகளுக்கு நேரடியாக உதவவோ, ஆதரவு தரவோ தயங்குகின்றன. சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் எதிரான போர்தான், ஜனநாயகத்துக்காகப் போராடும் அப்பாவி மக்களின் கூக்குரலைவிட மேலை நாடுகளுக்கு முக்கியமாக தெரிகிறது. ஜனநாயகத்தின் மீதான உதட்டளவு ஆதரவுதான் அவர்களுடையது போலும்!

(தினமணி)

ஈழநாடு



# டெங்கு தீவிரத்தன்மையை கட்டுப்படுத்த பரிசோதனை

திருமலை, மே 25

திருகோணமலை மாவட்டத்தில் டெங்குத் தாக்கத்தின் தீவிரத்தன்மையை கட்டுப்படுத்தும் நோக்கில் டெங்கு நுளம்பு பரிசோதனை நடவடிக்கைக்கள் கடந்த இரு வாரங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரனின் பணிப்புரைக்கமைவாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் அறிவுறுத்தல்களுக்கினங்க திருகோணமலை சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டின் கீழ் திருகோணமலை மாவட்டத்திலுள்ள எல்லாப் பிரதேசங்களிலும் டெங்கு நுளம்பு பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக, திருகோணமலை ஜமாலியா பிரதேசத்தில் நேற்று முன் தினம் காலை 8.30 மணியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த பரிசோதனை நடவடிக்கைக்களின்போது, பல இடங்கள் பார்வையிடப்பட்டதுடன், டெங்கு நுளம்பின் தாக்கம் தொடர்பாகவும், அதனால் ஏற்படும் பாதிப்புக்கள், உயிரிழப்புகள் பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கிழக்கு மாகாணத்தில் நேற்று 55 பேருக்கு ஆசிரியர் நியமனம்

## ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கினார்

திருமலை, மே 25

கிழக்கு மாகாணத்தில் முதற்கட்டமாக 55 பட்ட தாரிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானினால் ஆசிரியர் நியமனம் வழங்ஷகப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வு வழங்கும் நோக்கில் இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது

இந் நிகழ்வு நேற்று திருகோணமலை உவர் மலை விவேகானந்தா கல்லூரியில் இடம்பெற் றுள்ளது.



இதன்போது அங்கு கருத்து வெளியிட்ட ஆளுநர் செந்தில் தொண்டமான்,

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் போக்குவரத்து கட்டணங்கள் மிகவும் உயர்வாக உள்ளன.

இதனால் நியமனம் வழங்கப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கும் அவர்களின் நலன்கருதி இருப்பிடங்களுக்கு அருகாமையில் உள்ள பாடசாலைகளில் வெற்றிடங்கள் இருக்குமானால் அங்கு கடமைக்கு அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் எதிர்வரும் ஓராண்டில் 10 பட்டதாரி ஆசிரியர்களை உருவாக்கும் வகையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திசநாயக்க, கல்வி அமைச்சின் செயலாளர் இன்னும் பல கலந்து கொண்டனர். (அ)



# குரங்குகளால் தொல்லை

நிந்தவூர், மே 25

குரங்குகளின் தொல்லையால் நகர வர்த்தகர்கள் விவசாயிகள் பாதசாரிகள் பெரும் சிரமங்களை தினம் தோறும் முகம் கொடுத்து வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

தினமும் கொத்தணியாக 300 இற்கும் மேற்பட்ட குரங்குகள் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடமாடி வருகின்றன.

இவ்வாறு அதிகரித்து வரும் குரங்குகளின் தொல்லையை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு பொதுமக்களினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் சவளக்கடை, நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, மருதமுனை, சேனைக்குடியிருப்பு ,மணல்சேனை, பாண்டிருப்பு ,பெரியநீலாவணை, மத்தியமுகாம், சொறிக்கல்முனை, சம்மாந்துறை ,நிந்தவூர் ,அட்டாளைச்சேனை, அட்டப்பளம், ஒலுவில், வளத்தாபிட்டி, அக்கரைப்பற்று, தம்பிலுவில், பொத்துவில், இறக்காமம், பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் விதைப்பு மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கைகளை சேதப்படுத்துவதும் கடைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருட்களை நாசப்படுத்தி விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பழங்களை உண்டு வீணாக்குவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தவிர இம்மாவட்டத்தில் வீதிகளில் செல்கின்ற பாதசாரிகள் வாகனங்களின் போக்குவரத்தை குரங்கு கூட்டங்களாக வீதியின் நடுவில் சஞ்சாரம் செய்து தடுத்து வருகின்றன.இதனால் பல விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு குரங்குகளின் தொல்லையால் நகர வர்த்தகர்கள், விவசாயிகள், பாதசாரிகள் பெரும் சிரமங்களை தினம் தோறும் முகம் கொடுத்து வருகின்றனர்.

இவ்வாறு அதிகரித்து வரும் குரங்குகளின் தொல்லையை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ)






# காரைதீவு கண்ணகை அம்மன் வைகாசி திருக்குளிர்த்தி திங்கட்கிழமை ஆரம்பம்!

காரைதீவு, மே 25

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசித்திங்கள் திருக்குளிர்த்திச்சடங்கு பெருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை மாலை கடல்தீர்த்தம் எடுத்து வந்து திருக்கல்யாணக்கால் நடும் வைபவத்துடன் ஆரம்பமாகின்றது.

இப்பெருவிழா தொடர்ந்து 08 தினங்கள் நடைபெற்று ஜூன் மாதம் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30மணிக்கு திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடையும் எனஆலய தர்மகத்தாக்களுள் ஒருவரும் பிரதம பொறியியலாளருமான பரமலிங்கம் இராஜமோகன் தெரிவித்தார்.

30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை சடங்குப்பூஜையும் ஊர்சுற்றுக்காவியம் பாடலும் இடம்பெறும்.தொடர்ந்து புதன்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து பகல் 1மணிக்கு பூசையும் மாலை 7 மணிக்கு சடங்குப்பூசையும் ஊர்சுற்றுக்காவியம் பாடலும் இடம்பெறும்.

05ஆம் திகதி திங்கட்கிழமை பொங்கலுக்கான நெற்குத்தும் வைபவம் நடைபெறும்.மறு நாள்(6) செவ்வாய் அதிகாலை குளிர்த்தி பாடப்பெறும்.

எட்டாம்சடங்கு 12ஆம் திகதி மாலை 7மணிக்கு இடம்பெறும் என மேலும் அவர்கள் தெரிவித்தனர். (அ)



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் 3ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு திருகோணமலை அன்னை திரேசா முதியோர் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட பிரார்த்தனையில் கட்சியின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமாகிய செந்தில் தொண்டமான் கலந்துக்கொண்டார். (அ)

# இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி தீர்வே தேவை!

## காரைதீவு செயலமர்வில் ஏகமனதாக தீர்மானம்



காரைதீவு, மே 25

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு மீளப்பெற முடியாததும் சமஷ்டி முறையிலானதுமான தீர்வை வழங்க வேண்டும் எனும் மக்கள் பிரகடனம் தொடர்பாக தெளிவுபடுத்தும் செயலமர்வு கடந்த திங்கட்கிழமை காரைதீவில் இடம்பெற்றது.

இச் செயலமர்வு வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன் அகம் மனிதாபிமான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

செயலமர்வில் உரையாற்றிய அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா

“கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்கான தீர்வினை நோக்கிய 100 நாள் செயற்பாட்டு திட்டத்தின் இறுதிநாளில் வெளியிடப்பட்ட மக்கள் பிரகடனம் தொடர்பிலான விழிப்புணர்வு நடவடிக்கைகளை வடக்குக் கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன் அகம் மனிதாபிமான வள நிலையம் மேற்கொண்டு வருவதாகவும் இதன்மூலம் தமிழ் பேசும் மக்கள் உட்பட வடக்குக் கிழக்கில் வாழும் மக்கள் கௌரவமாக வாழ வழி சமைக்கும்” என தெரிவித்தார்.

அத்தோடு இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிவில் செயற்பாட்டாளர்கள், சமூக நலன்விரும்பிகள், பெண்கள் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர்கள், யுவதிகள் என 150 க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளையும் முன் வைத்தனர். (அ)

# கிழக்கு சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடல்

திருமலை, மே 25

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகாரிகளுடன் விசேட கலந்துரையாடல் நேற்று முன் தினம் ஆளுநர் அலுவலகத்தில் நடத்தினார்.

இதன்போது மாகாண சுகாதார அமைச்சின் கீழான நிறுவனங்கள் தொடர்பான பொதுவான அறிமுகமும் அடிப்படைச் செயற்பாடுகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்ட துடன்,கிழக்கு மாகாணத்தின் சுகாதாரக் கட்டமைப்பில் காணப்படும் பல்வேறு பிரச்னைகள் குறித்து இந்த கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் பிரச்னைகளுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

மாகாண சுகாதார திணைக்களம் மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கு தீர்வாக விசேட தேவை உடையவர்களுக்கு தேவையான உபகரணங்களை உடன் வழங்க தனியார் நிறுவனங்களின் உதவிகளை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் தெரிவித்தார்.



அத்துடன், குறைந்த உதவித்தொகை பெறுவதற்கான ஆகக் குறைந்த மாதாந்த வருமானமான 6000 ரூபாவை 10,000 ரூபாவாக உடன் மாற்றியமைக்குமாறும் அதற்கான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் குறிப்பிடப்பட்டது.

மேலும்,ஒவ்வொரு வாரமும் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டத்திலும் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வைத்திய முகாம்களை நடத்துமாறும் அதற்கான பட்டியலை ஒரு வார காலத்துள் தனக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும், கல்வித் திணைக்களம் மற்றும் சுகாதாரத் திணைக்களம் என்பவற்றின் உதவியுடன் விசேட தேவையுடைய சிறார்கள் தொடர்பான தகவல்களை குறிப்பாக கட்புல செவிப்புல குறைபாடுள்ள பிள்ளைகளின் தகவல்களை பெற்று அது தொடர்பான அறிக்கையொன்றை இம்மாத இறுதிக்குள் சமர்ப்பிக்குமாறும்,அரசினால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 5000 ரூபா வழங்கும் செயற்றிட்டம் தொடர்பான தகவல்களை 3 மாவட்ட செயலாளர்களிடம் இருந்து பெறுமாறும் பணிப்பாளருக்கு ஆளுநர் பணிப்புரை வழங்கினார். (அ)

# முஸ்லிம் திருமணச் சட்டத்தில் திருத்தம் வர ஒத்துழைக்காதீர்!

## எம்.பிக்களிடம் ஐக்கிய காங்கிரஸ் கோரிக்கை

காரைதீவு, மே 25

முஸ்லிம் திருமண சட்டத்தில் திருத்தம் கொண்டு வர முயற்சிக்கும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் எத்தகைய முயற்சிகளுக்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைக்கவேண்டாம் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) கோரிக்கை விடுத்துள்ளது.

இது பற்றி அக்கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீட் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முஸ்லிம் திருமண சட்டத்தை திருத்தவேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் இருபது பெண்களை நீதி அமைச்சர் அழைத்து அவர்கள் கோரிக்கையை ஏற்கவேண்டும் என முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த நாட்டில் பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் பெண்கள் வாழும்போது வெறும் இருபது பெண்களின் கோரிக் கைக்கு பின்னால் நீதி அமைச் சர் செல்வதன் மூலம் இதன் பின் னணியில் சியோனிஸம் இருக்கிறதா என்ற சந்தேகத்தை தருகி றது.

சில வருடங்களுக்கு முன் முஸ்லிம் திருமண சட்டத்தை திருத்த வேண்டும் என கோரிக்கை விடுத்த முஸ்லிம் பெண் எழுத் தாளர் ஒருவர் விவாகரத்து செய் துவிட்டு தற்போது ஐரோப்பா வில் திருமணத்துக்கப்பால் லீவிங் டு கெதர் என வாழ்வதை யும் அதை பெருமையாக சமூக வலைத்தளங்களில் போடுவதையும் காண்கிறோம்.

முஸ்லிம் திருமண சட்டத்தை மாற்றும் கோரிக்கைகளுக்கு பின்னால் ஐரோப்பிய சக்திகள் உள்ளன. இவ்வாறு கோரிக்கை விடுவோரில் சிலரை ஐரோப்பிய நாடுகளின் அரச சார்பற்ற நிறுவனங்கள் அழைத்துச் சலுகைகள் வழங்குவதன் மூலம் இவை தெளிவாகின்றது.

இந்த நிலையில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் பத்து வருடங்களாக பாராளுமன்றில் உண்டும் உறங்கியும் வழ்ந்து சமூகத்தின் எந்தவொரு உரிமையையும் பெற்றுத்தர வக்கில்லாதவர்களாக இருக்கும் நிலையில் எமது மூதாதையர் பெற்றுத்தந்த முஸ்லிம் திருமணச் சட்டத்தில் கை வைத்து அதனை எதிர்காலத்தில் இல்லாமல் செய்யும் துரோகத்துக்கு ஒத்துழைக்க வேண்டாம் என கோருகின்றோம்.

முஸ்லிம் திருமண சட்டத்தில் கைவைக்க முயன்ற கோட்டாபய மிக கேவலமாக நாட்டை விட்டு தப்பியோடியதைக் கண்டோம். அதே போல் முஸ்லிம் திருமண சட்டத்தில் ஜம்மியத்துல் உலமாவின் ஏகோபித்த அனுமதி இன்றி திருத்தம் கொண்டு வர முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முயன்றால் நிச்சயம் அவர்களுக்கும் இறை தண்டனை கிடைக்கும் என்பதுடன் எதிர் கால நமது சந்ததிகள் பதுவா செய்து சபிப்பார்கள் என்பதை எச்சரிக்கிறோம்-என்றுள்ளது. (அ-6)

# சூடானில் போர் நிறுத்த ஒப்பந்தம் மீறப்பட்டால் பொருளாதார தடை!

## அமெரிக்கா எச்சரிக்கை

நியூயோர்க், மே 25

**அமெரிக்காவும், சவுதி அரேபியாவும் மேற்கொண்ட முயற்சியால் சூடானில் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.**

வட கிழக்கு ஆபிரிக்க நாடான சூடானில் இராணுவத்திற்கும், துணை இராணுவப் படைகளுக்கும் ,டையே கடந்த ஒரு மாதமாக கடும் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

இந்த போரால் இதுவரை சூடானில் வெளிநாட்டவர்கள் உட்பட நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 1.5 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர் மற்றும் 5000 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் தங்களது தாயகம் திரும்பியுள்ளனர்.

இதனிடையே அமெரிக்காவும், சவுதி அரேபியாவும் மேற்கொண்ட முயற்சியால் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இச்சமயத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.



இந்நிலையில், சூடானில் போர் நிறுத்த ஒப்பந்தம் மீறப்பட்டால் இராணுவ மற்றும் துணை இராணுவப் படைகளின் மீது பொருளாதார தடை விதிக்கப்படும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக பேசிய அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் அன்ரனி பிளிங்கன், சூடானில் அர்த்தமற்ற முறையில் நடந்து வரும் போரால் பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன. இந்த போர் நிறுத்த ஒப்பந்தம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை அளிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

மேலும் சூடானில் போர் நிறுத்த ஒப்பந்தம் சீர்குலையாமல் இருப்பது இராணுவம் மற்றும் துணை இராணுவ படைகளின் முழு பொறுப்பு என அவர் கூறினார். (அ)

# 20 பேரை பலியெடுத்த கயானா தீ விபத்து!

ஜோர்ஜ்ரவுன், மே 25

தென் அமெரிக்காவின் கயானாவில் பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பான காரணம் வெளியாகியுள்ளது.

குறித்த பாடசாலையின் மாணவி ஒருவரின் கைப்பேசி பறிமுதல் செய்யப்பட்டதால், அவர் உயிரை மாய்த்துக்கொள்ள முற்பட்டபோது, இந்த தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீப்பரவலின்போது மாணவிகள் தங்கியிருந்த அறைகள், மூடப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது.

தென் அமெரிக்காவின் கயானாவில் பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 20 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் 19 பேர் பாடசாலை மாணவர்கள் என சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவத்தினை தொடர்ந்து கயானாவில் மூன்று தினங்களை துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு அந்த நாட்டு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

அத்துடன், இந்த சம்பவத்தில் மேலும் பலர் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் மேலதிக சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரும் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# களமுனைக்கு திடீரென சென்ற உக்ரைன் அதிபர்!

கீவ், மே 25

உக்ரைன் கடற்படை தினத்தில் கடற்படையினரை வாழ்த்துவதற்காக நேற்று முன் தினம் உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி போர் நடைபெறும் களமுனையின் முன்வரிசைக்கு சென்றுள்ளார்.

உக்ரைனிய கடற்படை தினத்தில் எங்கள் வீரர்களை வாழ்த்த நான் இங்கு வந்துள்ளேன். உக்ரைனைப் பாதுகாக்கும் அனைவருக்கும் மகிமை. உக்ரைனிய கடற்படையினரின் தொழில் முறை, பின்னடைவு மற்றும் சகிப்புத்தன்மைக்கு நான் நன்றி கூறுகிறேன். நீங்கள் தைரியமாக ரஷ்ய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து எங்கள் நாட்டைப் பாதுகாக்கிறீர்கள், நிலம், கடல் மற்றும் காற்று ஆகியவற்றில் மிகவும் கடினமான பணிகளைச் செய்கிறீர்கள்."என அவர் தெரிவித்தார்.

எனினும் அதிபர் களமுனையின் எந்த பகுதிக்குச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடப்படவில்லை.

மே 21 அன்று, ஜி-7 உச்சிமாநாட்டுக்காக ஜெலென்ஸ்கி ஜப்பானில் இருந்தார். அங்கு அவர் உக்ரைனின் சர்வதேச பங்காளிகளை சந்தித்தார். குறிப்பாக, அமெரிக்க அதிபர் ஜோ பைடனுடன் சந்திப்பை மேற்கொண்டார். (அ)

# ஆபிரிக்க அகதிகளை நடுக்கடலில் விட்டுச்சென்றனர் முகமூடி நபர்கள்

## கிரீஸ் நாட்டில் அதிர்ச்சி சம்பவம்





எதென்ஸ், மே 25

கிரீஸ் அரசுடன் பணியாற்றும் முகமூடி அணிந்த நபர்கள் புகலிடம் தேடி வந்த சோமாலியா, எரித்திரியா, எத்தியோப்பியா நாடுகளைச் சேர்ந்த 12 அகதிகளிடம் பொருட்களைப் பறித்துக் கொண்டு நடுக்கடலில் விட்டுச்சென்றிருக்கின்றனர். சர்வதேச சட்டங்களை அப்பட்டமாக மீறிய இந்த அதிர்ச்சி சம்பவத்தை பல காணொலிகளின் வாயிலாக நியூயோர்க் ரைம்ஸ் ஊடகம் அம்பலப்படுத்தியுள்ளது.

நியூயோர்க் ரைம்ஸ் ஊடகத்தின் கூற்றுப்படி, கிரீஸ் நாட்டில் தஞ்சம் கோரும் எண்ணத்துடன் துருக்கியிலிருந்து கைக்குழந்தைகள் உள்ளிட்ட 12 பேர் படகில் பயணித்திருக்கின்றனர்.

கடந்த ஏப்ரல் 11ஆம் திகதி கிரீஸ் நாட்டை சென்றடைந்த நிலையில், அகதிகளை சுற்றிவளைத்த முகமூடி நபர்கள் அவர்களது ஹிஜாப்களை கிழித்து பணம், அலைபேசிகளை பறித்துக்கொண்டு ஒரு வானில் பல மணி நேரம் அடைத்து வைத்திருக்கின்றனர்.

பின்னர், அகதிகளை அதிவேக படகில் அழைத்துச் சென்று கிரீஸ் கடலோர காவல்படையின் படகுக்கு மாற்றப்பட்டிருக்கின்றனர். இதைத் தொடர்ந்து கிரீஸ் நாட்டு கடல் எல்லை அருகே அழைத்துச் செல்லப்பட்டு சிறிய படகில் அகதிகளைக் கைவிட்டு சென்றிருக்கின்றனர். பின்பு இந்த அகதிகளை துருக்கி அதிகாரிகள் மீட்டிருக்கின்றனர்.

"அந்த நாள் நாங்கள் உயிர் பிழைப்போம் என நினைக்கவில்லை. எந்த கருணையுமின்றி அந்த சிறிய படகில் எங்களை விட்டுச் சென்றனர்," என 27 வயதான சோமாலிய அகதி நைமா ஹசன் கூறியுள்ளார்.

அகதிகளை படகில் ஏற்றி அனுப்பும் காட்சிகள் ஆஸ்திரிய நாட்டு தொண்டு ஊழியர் பயத் முல்லா மூலம் கிடைத்திருப்பதாக நியூயோர்க் ரைம்ஸ் ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் புகலிடம் கோருவதற்கான விதிகள், சர்வதேச சட்டத்தின் அடிப்படையிலான கடமைகளை கிரீஸ் மதிக்க வேண்டும் என புலம்பெயர்வுக்கான ஐரோப்பிய ஆணையத்தின் பேச்சாளர் அனிட்டா ஹிப்பர் கூறியிருக்கிறார். இந்த சம்பவம் தொடர்பாக இதுவரை எந்த விளக்கத்தையும் கிரீஸ் அரசு தரப்பு அளிக்கவில்லை. (அ)

# டொனெட்ஸ்க் பகுதியிலிருந்து வெளியேற்றப்படும் மக்கள்!

கீவ், மே 25



கிழக்கு உக்ரைனில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் வெளியேற்றப்படுவதால், துயரமும் கவலையும் நிறைந்த முகங்களை பார்க்கக்கூடியதாக இருந்ததாக ஐரோப்பிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டொனெட்ஸ்க் பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்ட உக்ரேனியர்களின் முகங்களில் துக்கமும் கவலையும் வெளிப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி சிலர் மேற்கு உக்ரைனில் உள்ள எல்விவ் நகரின் பாதுகாப்பிற்காக ரயிலில் ஏற பொறுமையுடன் காத்திருக்கிறார்கள்.

டொனெட்ஸ்க் நகரின் வடமேற்கில் உள்ள போக்ரோவ்ஸ்க் என்ற நகரத்திலிருந்து இந்த மக்கள் வெளியேற்றப்படுகிறார்கள்.

ரஷ்யாவின் படையெடுப்பிற்குப் பின்னர் இப்பகுதி கடுமையான சண்டைகளைக் கண்டுள்ளது. அதில் பாதி இப்போது ரஷ்ய ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



## பத்திரணவால் தடையான ஆட்டம்!


சென்னை, மே 25

சென்னை - குஜராத் அணிகள் நேற்று முன்தினம் மோதிய போட்டி இடையில் சில நிமிடங்கள் தடைப்பட்டது.

16ஆவது ஓவரை மதீஷ பத்திரண வீச வந்த போது நடுவர், அவரை தடுத்து நிறுத்தினார். அவர், 9 நிமிடங்கள் களத்துக்கு வெளியே சென்றுவிட்டு உடனடியாக பந்து வீச வந்த, அதேயளவு நிமிடங்களை அவர், களத்தில் செலவிட்ட பின்னர்தான் பந்து வீச முடியும் என நடுவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அணித் தலைவர் டோனி நடுவரிடம் பேசினார். இதனால் சுமார் 5 நிமிடங்கள் ஆட்டம் தடைபட்டது. பின்னர் ஒரு வழியாக பத்திரணவை பந்து வீச நடுவர் அனுமதித்தார்.

## ஓட்டம் இல்லாத பந்துகளுக்காக 42,000 மரக்கன்றுகள் நடப்படும்!




சென்னை, 25

சென்னை - குஜராத் போட்டியில் ஓட்டம் எடுக்கப்படாத பந்துகளுக்காக 42 ஆயிரம் மரக்கன்றுகளை இந்திய கிரிக்கெட் சபை நாட்டவுள்ளது.

ஐ. பி. எல். தொடரின் இறுதிக்கு முந்தைய சுற்று நேற்று முன்தினம் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் தொடங்கியது.

இதன்போது, பசுமை விழிப்புணர்வை வலியுறுத்தும் விதமாக இந்திய கிரிக்கெட் சபை சிறப்பு அறிவிப்பை ஒன்றை வெளியிட்டது.

இதன்படி, இறுதிக்கு முந்தைய சுற்றில் வீசப்படும் ஓட்டம் எடுக்கப்படாத ஒரு பந்துக்கு 500 மரக்கன்றுகள் நடப்படும்.

இந்த வகையில் சென்னை - குஜராத் அணிகள் மோதிய போட்டியில் மொத்தம் 84 ஓட்டம் இல்லாத பந்துகள் வீசப்பட்டிருந்தன. குஜராத் அணி 34 ஓட்டம் இல்லாத பந்துகளையும், சென்னை 50 ஓட்டம் இல்லாத பந்துகளையும் வீசியிருந்தது. இந்த ஆட்டத்தின் வாயிலாக 42 ஆயிரம் மரக்கன்றுகள் இந்திய கிரிக்கெட் சபை சார்பில் நடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 10ஆவது முறை இறுதிக்கு முன்னேறியது சென்னை!

சென்னை, மே 25

ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தகுதி பெற்றுள்ளது. குஜராத் டைட்டன்ஸ் அணியை 15 ஓட்டங்களால் வீழ்த்தியதன் மூலமே 10ஆவது தடவையாக ஐ. பி. எல். இறுதிப் போட்டிக்கு அந்த அணி நுழைந்துள்ளது.

சென்னை சேப்பாக்கம் எம். ஏ. சிதம்பரம் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த இறுதிக்கான தகுதிப் போட்டி - 1 போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடியது சென்னை.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 172 ஓட்டங்கள் குவித்தது. தொடக்க வீரர்களான ருதுராஜ் கெய்க்வாட், டெவன் கொன்வே நிலையான தொடக்கம் கொடுத்தனர். ருதுராஜ் கெய்க்வாட் 44 பந்துகளில், ஒரு சிக்ஸர் 7 பௌண்ட்ரிகளுடன் 60 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மொஹித் சர்மா பந்தை லோங் ஒன் திசையில் தூக்கி அடித்த போது டேவிட் மில்லரிடம் பிடியெடுப்பானது. முதல் விக்கெட்டுக்கு டெவன் கொன்வேயுடன் இணைந்து ருதுராஜ் கெய்க்வாட் 10.3 ஓவர்களில் 87 ஓட்டங்கள் சேர்த்தார்.

இதையடுத்து களமிறங்கிய ஷிவம் துபே 3 பந்துகளில் ஓர் ஓட்டம் எடுத்த நிலையில் நூர் அகமது பந்தில் "போல்ட்" ஆனார். அஜிங்க்ய ரஹானே 10 பந்துகளில், 17 ஓட்டங்கள் எடுத்த நிலையில், தர்ஷன் நல்கண்டே பந்தில் ஆட்டமிழந்தார். நிதானமாக துடுப்பெடுத்தாடிய டெவன் கொன்வே 34 பந்துகளில், 4 பௌண்ட்ரிகளுடன் 40 ஓட்டங்கள் சேர்த்து ஷமியின் பந்தில் விக்கெட்டை பறிகொடுத்தார். அம்பதி ராயுடு 9 பந்துகளில் 17 ஓட்டங்கள் சேர்த்து வெளியேறினார். ரவீந்திர ஜடேஜா 16 பந்துகளில், 2 சிக்ஸர்களுடன் 22 ஓட்டங்கள் எடுத்த நிலையில் முகமது ஷமி பந்தில் போல்ட் ஆனார்.

அணித் தலைவர் டோனி 2 பந்துகளில் ஓர் ஓட்டம் எடுத்த நிலையில் மோஹித் சர்மா பந்தில் ஆட்டமிழந்து ரசிகர்களுக்கு ஏமாற்றம் அளித்தார். மொயின் அலி 4 பந்துகளில் 9 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

குஜராத் அணி சார்பில் முகமது ஷமி, மோஹித் சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். தர்ஷன் நல்கண்டே, ரஷித் கான், நூர் அகமது ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

173 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்தது. ரித்திமான் சஹா 12 ஓட்டங்களில் தீபக் சாஹர் பந்தில் வெளியேறினார். அணித் தலைவர் ஹார்திக் பாண்ட்யா 8 ஓட்டங்களில் தீக்ஷன பந்தில் விக்கெட்டை பறிகொடுத்தார்.

தசுன் சானகா (17), டேவிட் மில்லர் (4) ஆகியோரை ஜடேஜா வெளியேற்றினார். நிதானமாக விளையாடிய ஷுப்மன் கில் 38 பந்துகளில், ஒரு சிக்ஸர், 4 பௌண்ட்ரிகளுடன் 42 ஓட்டங்கள் எடுத்த நிலையில் தீபக் சஹர் பந்தில் டெவன் கொன்வேயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

ஒரு கட்டத்தில் 14 ஓவர்களில் குஜராத் அணி 5 விக்கெட்கள் இழப்புக்கு 95 ஓட்டங்கள் எடுத்திருந்தது. 36 பந்துகளில் வெற்றிக்கு 78 ஓட்டங்கள் தேவையாக இருந்த நிலையில் விஜய் சங்கர், ராகுல் தெவாட்டியா



களத்தில் இருந்தனர். தீக்ஷன வீசிய 15ஆவது ஓவரின் முதல் பந்தில் தெவாட்டியா (3), விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

இதையடுத்து ரஷித் கான் களமிறங்கினார். இந்த ஓவரில் 7 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டன. பத்திரண வீசிய அடுத்த ஓவரில் ரஷித் கான் தலா ஒரு சிக்ஸர், பௌண்ட்ரி விரட்ட 13 ஓட்டங்கள் கிடைத்தது. துஷார் தேஷ் பாண்டே வீசிய 17ஆவது ஓவரில் விஜய் சங்கர் ஒரு சிக்ஸரையும் ரஷித் கான் ஒரு சிக்ஸர், ஒரு பௌண்ட்ரியும் விளாச குஜராத் அணிக்கு 19 ஓட்டங்கள் கிடைக்கப் பெற்றன. இதனால் ஆட்டத்தில் பரபரப்பு அதிகமானது.

கடைசி 3 ஓவர்களில் வெற்றிக்கு 39 ஓட்டங்கள் தேவையாக இருந்தன. பத்திரண வீசிய 18ஆவது ஓவரின் 3ஆவது பந்தில் விஜய் சங்கர் (14) ஆட்டமிழந்தார். அடுத்த பந்தில் தர்ஷன் நல்கண்டே (0) ரன் அவுட் ஆனார். இந்த ஓவரில் பத்திரண 4 ஓட்டங்களை மட்டுமே வழங்கினார். இது திருப்புமுனையாக அமைந்தது.

12 பந்துகளில் 35 ஓட்டங்கள் தேவை என்பதால் குஜராத் அணிக்கு அழுத்தம் அதிகமானது. துஷார் தேஷ்பாண்டே வீசிய 19ஆவது ஓவரின் முதல் பந்தை பௌண்ட்ரிக்கு விரட்டிய ரஷித் கான் 3ஆவது பந்தை டீப் பொயின்ட் திசையில் அடித்தபோது டெவன் கொன்வேயிடம் பிடிகொடுத்தது. ரஷித் கான் 16 பந்துகளில் 30 ஓட்டங்கள் சேர்த்தார். இதன் பின்னர் களமிறங்கிய ஷமி பௌண்ட்ரி அடிக்க இந்த ஓவரில் 8 ஓட்டங்கள் கிடைத்தன. பத்திரண வீசிய கடைசி ஓவரில் 27 ஓட்டங்கள் தேவையாக இருந்தது.

முதல் 5 பந்துகளில் 11 ஓட்டங்கள் சேர்க்கப்பட்ட நிலையில் கடைசி பந்தில் முகமது ஷமி (5) ஆட்டமிழந்தார். முடிவில் 20 ஓவர்களில் குஜராத் அணி 157 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து தோல்வி அடைந்தது. நூர் அகமது 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற சென்னை 10ஆவது முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. தோல்வி அடைந்த குஜராத் அணி வரும் 26ஆம் திகதி அகமதாபாத்தில் நடைபெறும் தகுதி சுற்று 2ஆவது ஆட்டத்தில் பங்கேற்கும்.

இதில், வெற்றி பெற்றால் குஜராத் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற வாய்ப்பு உள்ளது. சென்னை தரப்பில் தீபக் சஹர், தீக்ஷன, ஜடேஜா, பத்திரண ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

# எல். பி. எல். தொடரில் விளையாடுவதற்கு 20 சர்வதேச, உள்ளூர் வீரர்கள் ஒப்பம்!




கொழும்பு, மே 25

இந்த வருடம் நடைபெறவுள்ள 4ஆவது லங்கா பிறீமியர் லீக் (எல். பி. எல்) இருபது 20 தொடரில் பங்கேற்க 10 சர்வதேச கிரிக்கெட் வீரர்களும் 10 உள்நாட்டு கிரிக்கெட் வீரர்களும் 5 அணிகளில் கையொப்பமிட்டுள்ளனர்.

நடப்பு சம்பியனும் முதல் 3 அத்தியாயங்களில் சம்பியனுமான யாழ்ப்பாணம் கிங்ஸ் அணியில் தென்னாபிரிக்காவின் டேவிட் மில்லர், ஆப்கானிஸ்தானின் ரஹ்மானுல்லா குர்பாஸ் ஆகிய வெளிநாட்டு கிரிக்கெட் வீரர்களும் திசர பெரேரா, மஹீஷ் தீக்ஷன ஆகிய உள்நாட்டு கிரிக்கெட் வீரர்களும் முன்கைச்சாத்திட்ட வீரர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணியில் பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அஸாம், நசீம் ஷா ஆகிய வெளிநாட்டு கிரிக்கெட் வீரர்களும் மதீஷ பத்திரண, சாமிக கருணாரட்ன ஆகிய உள்நாட்டு வீரர்களும் தம்புள்ளை அவ்ரா அணியில் அவுஸ்திரேலியாவின் மத்தியூ வேட், தென்னாபிரிக்காவின் லுங்கி நிகிடி ஆகிய வெளிநாட்டு வீரர்களும் குசல் மெண்டிஸ், அவிஷ்க பெர்னாண்டோ ஆகிய உள்நாட்டு கிரிக்கெட் வீரர்களும்.

காலி கிளாடியேட்டர்ஸ் அணியில் பங்களாதேஷின் ஷகீப் அல் ஹசன், தென்னாபிரிக்காவின் தப்ரெய்ஸ் ஷம்சி ஆகிய வெளிநாட்டு கிரிக்கெட் வீரர்களும் தசுன் சானக, பானுக ராஜபக்ஷ ஆகிய உள்நாட்டு கிரிக்கெட் வீரர்களும் கண்டி போல்கன்ஸ் அணியில் ஆப்கானிஸ்தானின் முஜிபுர் ரஹ்மான், பாகிஸ்தானின் பக்கார் ஷமான் ஆகிய வெளிநாட்டு கிரிக்கெட் வீரர்களும் வனிந்து ஹசரங்க, அஞ்சலோ மத்தியூஸ் ஆகிய உள் நாட்டு வீரர்களும் முன்கைச்சாத்திட்ட வீரர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களைவிட சர்வதேச கிரிக்கெட் போட்டியில் விளையாடிய தேசிய வீரர்கள், தேசிய அணியில் இடம் பெறாமல் முதல்தர அல்லது தொழில் முறை கிரிக் கெட் போட்டியில் விளையாடிய வீரர்கள், முன்னாள் தேசிய வீரர்கள் என மூன்று வகை கிரிக்கெட் வீரர்கள் ஏலம் மூலம் எடுக்கப்படவுள்ளனர்.

அணிக்கு உள்வாங்கப்படும் வீரர்கள் 3 வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்படவுள்ளனர். இதன் மூலம் அணிகளைக் கட்டி எழுப்பக்கூடியதாக இருக்கும் என இலங்கை கிரிக்கெட் நம்புகிறது. எனினும், புரிந்துணர்வு அடிப்படையில் ஒவ்வொரு வருடமும் எல். பி. எல். முடிவில் வீரர்களின் ஒப்பந்தத்தை முடிவுறுத்த அணி உரிமையாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# 2021இல் மட்டும் ரூ. 10 பில்லியன் ரயில் திணைக்களத்துக்கு நட்டம்

## அமைச்சர் பந்துல தகவல்

கொழும்பு, மே 25

**இலங்கை ரயில் சேவைகள் திணைக்களத்தை, திணைக்கள முறைமையிலிருந்து மாற்றி அதனை அதிகாரசபை முறைக்குக் கொண்டுவருவதற்கான சட்டத்திருத்தங்களை மேற்கொள்ள உள்ளதாகவும், எதிர்க்கட்சியினர் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**



இதனால், 2021ஆம் ஆண்டு மாத்திரம் ரயில் திணைக்களத்துக்கு 10 பில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு எதிர்க்கட்சி எம்.பியின் கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2021ஆம் ஆண்டு ரயில் திணைக்களத்தின் மொத்த வருமானம் வெறும் 2.6 பில்லியன் ரூபா யாகும். அதுபோல, மேலதிக கொடுப்பனவுக்காக 2.3 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

மேலும், சம்பளம் வழங்குவதற்காக 7 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இதனால், 2021ஆம் ஆண்டு மாத்திரம் ரயில் திணைக்களத்துக்கு 10 பில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது.

ரயில் திணைக்களத்தில் இடம்பெறும் ஊழல், மோசடிகளை இல்லாதொழித்து அத்திணைக்களத்தின் சேவைகளை வினைத்திறனாக்குவதற்காக முழுமையாக அதனை டிஜிற்றல் மயப்படுத்தவேண்டும்.

குறிப்பாக, ரயில் ரிக்கெற்றுக்களை விநியோகம் செய்தல், பதிவு செய்தல் என்பற்றை முழுமையாக எதிர்காலத்தில் டிஜிற்றல் மயப்படுத்தப் போகிறோம்.

பேருந்து கட்டணத்தின் மூன்றில் ஒரு பகுதியை ரயில் கட்டணமாக்குவதற்கான கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட உள்ளது-என்றார். (அ)

# வீதிப் பாதுகாப்பு வாரத்தையொட்டி வவுனியாவில் மாணவர்கள் பேரணி





வவுனியா, மே 25

வீதிப் பாதுகாப்பு வாரத்தையொட்டி பாடசாலை மாணவர்களின் விழிப்புணர்வுப் பேரணி வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அதிபர் ஆ.லோகேஸ்வரன் ஆலோசனையில் பாடசாலை வீதிப் பாதுகாப்பு குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வு ஊர்வலம் பாடசாலை முன்றலில் ஆரம்பமாகி மணிக்கூட்டு சந்தி வரை சென்று அங்கிருந்து மீண்டும் பாடசாலையை அடைந்தது.

இவ் ஊர்வலத்தில் வவுனியா பிரதேச செயலாளர் நா. கமலதாசன், பாடசாலை அதிபர், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என 800 பேர் வரை கலந்துகொண்டனர். (அ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஆலயத்துக்கு ரூபா ஒரு லட்சம்!



வடமராட்சி, மே 25

பதுளை - அப்புத்தளை - தொட்டுலாகலை பிரதேசத்தில் அமைந்துள்ள கதிர்வேலாயுத சுவாமி கோவில் கட்டட நிர்மாணப் பணிக்காக ஒரு இலட்சம் ரூபாய் நிதியை சந்நிதியான் ஆச்சிரமம் நேற்று முன்தினம் வழங்கியது.

இந்த உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தனது தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று ஆலய நிர்வாகிகளிடம் வழங்கி வைத்தார். (ஐ-02)

# ரூபா 7.5 மில்லியன் அபராதத்துடன் அலி சப்ரி ரஹீம் எம்.பி. விடுதலை!

கொழும்பு, மே 25

மூன்றரை கிலோகிராம் தங்கத்துடன் வெளிநாட்டில் இருந்து நாட்டுக்குள் பிரவேசித்த முஸ்லிம் ஐக்கிய தேசிய கூட்டமைப்பின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மூன்றரை கிலோகிராம் தங்கத்துடன் வெளிநாட்டில் இருந்து வந்த நிலையில், அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்க பிரிவு அதிகாரிகளால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார்.

மத்திய கிழக்கு நாடொன்றில் இருந்து அவர் நாடு திரும்பினார். இதன்போது, அவர் கட்டுநாயக்க விமானத்தள பிரபுக்கள் முனையத்தில் வைத்து கைதானார்.

கைதானவரிடம் இருந்து ஆறு கோடி ரூபா பெறுமதியான மூன்றரை கிலோகிராம் தங்கம் கைப்பற்றப்பட்டது.

அவரிடம் சுங்கப்பிரிவு அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், 7.5 மில்லியன் ரூபா அபராதம் விதித்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.



# கதிர்காமம் பாத யாத்திரை செல்வோருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் சத்துமா பொதி

வடமராட்சி, மே 25

வடமராட்சி, தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காமத்துக்கு பாத யாத்திரையாகச் சென்றுகொண்டிருக்கும் யாத்திரிகர்களுக்கு திருகோணமலை பட்டியிருப்பு மூதூர் சிறி சித்திவிநாயகர் ஆலயத்தில் வைத்து சத்துமா பொதிகளையும், சீனி தேயிலை, உட்பட பல இலட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களைச் சந்நிதியான் ஆச்சிரமத்தினரால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

குறித்த 2 ஆம் கட்ட உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள்தொண்டர்களுடன் சென்று நேரடியாக வழங்கினார். (அ-2)

# சீன நாட்டுப் பிரஜையை நாடு கடத்துமாறு உத்தரவு!

கொழும்பு, மே 25

இரண்டு கடவுச்சீட்டுக்களுடன் இந்நாட்டுக்கு வந்த சீன பிரஜையை நாடு கடத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இந்த உத்தரவை குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்கு விடுத்துள்ளார்.

இரண்டு கடவுச்சீட்டுகளுடன் இலங்கை வந்த குறித்த சீனப் பிரஜை கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் இராஜாங்க அமைச்சர் ஒருவரின் தலையீட்டினால் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# படகின் சுக்கான் உடைந்ததால் கடலில் அந்தரித்த பயணிகள்!

யாழ்ப்பாணம், மே 25

நெடுந்தீவு - குறிகாட்டுவான் சேவையில் ஈடுபடும் சமுத்திர தேவா படகின் சுக்கான் உடைந்ததால் பயணிகள் கடலில் அந்தரித்தனர். எனினும், மீனவர்களின் உதவியால் அவர்கள் கரை திரும்பினர்.

நேற்று முன்தினம் காலை நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி 70 பயணிகளுடன் பயணித்த சமுத்திரதேவா படகு மலையடிப் பகுதியை அண்மித்தபோது அதன் சுக்கான் உடைந்தது.



இதனால், படகு கடலில் அந்தரித்து நின்றது. அதில் பயணித்தவர்கள் அச்சமடைந்திருந்தனர். எனினும், படகை இயக்குபவர்கள் அப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்களின் உதவியுடன் படகை குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு பாதுகாப்பாக இழுத்து வந்து சேர்த்தனர். (ஐ-03)

## முகமாலையில்...

ஏ-9 நெடுஞ்சாலையில் - முகமாலை பகுதியில் நேற்று புதன்கிழமை காலை 6.30 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றது. இதில், வடமராட்சி - பருத்தித் துறை - துன்னாலையை சேர்ந்த கிருஷ்ணகுமார் விக்னேஸ்வரன் (வயது 32) என்பவரே உயிரிழந்தார்.

பருத்தித்துறையிலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த இ. போ. ச. பேருந்தும் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளுமே மோதி விபத்துக்கு உள்ளாகின.

இதில், மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவருடன், பயணித்திருந்த இரு சிறுவர்கள் படுகாயமடைந்தனர். இவர்கள் உடனடியாக பளை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

விபத்து தொடர்பில் பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-02)

## கைதான...

தையிட்டியில் தமிழ் மக்களின் காணியில் ஆக்கிரமிக்கப்பட்ட விகாரையை அகற்றவும் அருகிலுள்ள காணிகளை விடுவிக்கவும் வலியுறுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடந்த திங்கட்கிழமை போராட்டத்தை முன்னெடுத்தது.

நேற்று முன்தினமும் போராட்டம் தொடர்ந்த நிலையில் பலாலி பொலிஸார் போராட்டத்தை கலைக்க அடக்கு முறையை பயன்படுத்தினர். இதன் போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 4 பெண்கள் உட்பட 9 செயல்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் நேற்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

நீதிவான் காயத்திரி சைலஜன் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்ட வழக்கில், கைதான சட்டத்தரணி க. சுகாஷ் சார்பாக அவரே நீதிமன்றத்தில் முன்னிலையானார்.

அவருடன், சிரேஷ்ட சட்டத்தரணிகளான ந. காண்டீபன், ஜெயரூபன் உள்ளிட்ட 15 சட்டத்தரணிகள் நீதிமன்றில் முற்பட்டனர்.

விசாரணை முடிவில், நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய கட்டளையின் பிரகாரம் போராட்டக்காரர்களும் பொலிஸாரும் செயல்படலாம் என்று உத்தரவிட்ட நீதிவான், கைது செய்யப்பட்ட 9 பேரையும் தலா ஒரு இலட்சம் ரூபாய் ஆள் பிணையில் செல்ல நீதிவான் அனுமதியளித்தார்.

தொடர்ந்து இந்த வழக்கு எதிர்வரும் ஜூன் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

## தமிழ்...

ளும் இருந்தார்கள் என்பதற்கு வரலாறு உள்ளது. திஸ்ஸ விகாரை சிறிய விகாரையாக இருந்திருக்கலாம். பின்னர் பெரிய விகாரையாக கட்டப்பட்டிருக்கலாம். விகாரை கட்டப்பட்ட இடத்துக்கு சொந்தக்காரர்கள் இருக்கின்றனர் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், எங்களுக்கு சரிவர தெரியவில்லை. அவர்களுடன் பேச நாங்கள் தயாராக வுள்ளோம்.

விகாரை கட்டப்பட்ட இடத்தில் பொது மக்களின் காணிகள் இருக்கின்றது. இந்தக் காணிகளை மக்களுக்கு கொடுக்க வேண்டும். தங்களின் எண்ணத்தை அவர்கள் சொன்னால் நிச்சயமாக கொடுப்போம். அதற்கு நாங்கள் முன்நிற்போம்.

இதேபோன்று (திஸ்ஸ விகாரை) நாட்டில் கட்டப்பட்ட விகாரையாக இருக்கலாம் - பள்ளிவாசலாக - ஆலயமாக - தேவாலயமாக இருக்கலாம் அதனை இடித்து தள்ளுவதற்கு யாருக்கும் உரிமை கிடையாது - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## சிவாலயங்களை...

லிங்கம் தற்போது இரண்டாம் இலக்க சிவன் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. அந்த ஆலயத்தில் பூசைகள் இடம்பெறாலும் இந்த சிவலிங்கம் இன்னமும் பிரதிஷ்டை செய்யப்படவில்லை. இதே நேரம், ஆலயத்தின் நிர்வாகம் சிங்களவரிடமே உள்ளது. இதனால், நாம் ஆலய அமைப்புப் பணிகளை முன்னெடுக்க முடியாதுள்ளது.

இதேநேரம், முத்துக்கல் என்ற கிராமத்தில் சிவ ஆலயம் மறைக்கப்பட்டுள்ளது. அங்கு சிவலிங்கம் உடைக்கப்பட்டுள்ளது. அந்த ஆலயம் தற்போது பிக்குகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கு செல்ல அனுமதியில்லை. தொல்பொருள் திணைக்களத்தின் ஆதரவுடன் இதனை பிக்குகள் செயல்படுத்தி வருகின்றனர்.

பொலநறுவையில் இந்து தமிழ் மக்கள் பலர் வாழ்கின்றனர். ஆனால், அவர்களால் அங்கு நடக்கும் விடயங்களை வெளிப்படுத்த முடியாதுள்ளது. அவர்கள் பயத்தில் அச்சத்திலேயே வாழ்கிறார்கள். இங்குள்ள, அரசியல்வாதிகள் வெறுமனே கதைகளை மட்டுமே பேசி செல்கின்றனர்.

பொலநறுவை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜகத் திடம் அந்த ஆலயத்தை (இரண்டாம் இலக்க சிவன் ஆலயம்) எம்மிடம் ஒப்படைக்குமாறு கோரினோம். ஆனால், இதுவரை நிறைவேறவில்லை. அந்த ஆலயத்தை பெற்றுத் தந்தால் இந்திய அரசின் உதவியையோ அல்லது மக்களிடம் - புலம்பெயர் உறவுகளிடம் நிதி பெற்று நாம் ஆலயத்தை புனரமைப்போம்.

பொலநறுவையின் புராதன இந்து ஆலயங்களையும் இந்து தமிழ் மக்களையும் காப்பதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்றும் இதன்போது பொலநறுவை இந்துக் குருமார் ஒன்றியத்தினர் கேட்டுக்கொண்டனர். (ஐ)

## ஜனாதிபதி...

குழுவின் தலைவர் பதவியிலிருந்து நான் நீக்கப்பட்டமை எனது தோல்வியில்லை - இது இலங்கையின் அனைத்து மக்களினதும் தோல்வி. இதனை பற்றி எனக்கு எந்த பிரச்னையுமில்லை.

ஜனாதிபதி தேர்தலில் நான் போட்டியிடுவேன். இதனை முன்னரும் நான் உறுதியாகக் கூறியுள்ளேன் என்றும் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். (ஐ)

## சில சிங்கள...

அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை போன்றது. அது மீண்டும் நிகழ்கின்றது", என்று அவர் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, "உயிர்த்த ஞாயிறு தாக்குதலை பலம் பொருந்திய சில சிங்கள அரசியல்வாதிகளே திட்டமிட்டனர்" - என்று கூறினார்.

"ஹிஜாஸ் ஹிஸ்புல்லா விவகாரம், மருத்துவர் ஷாபி விவகாரம் போன்ற பல விடயங்கள் முஸ்லிம்களை ஆபத்தானவர்களாக சித்திரிப்பதற்காக முன்னெடுக்கப்பட்டன"- என்றும் சந்திரிகா தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## மின்சார...

மின்சார கட்டணம் 40 சதவீதத்தாலும் குறைக்கப்படும் - என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக, மின்சார கட்டணத்தை எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து 3.15 வீதத்தால் குறைக்க முடியும் என்று பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு இலங்கை மின்சார சபை அறிவித்ததாக நேற்று பதவிநீக்கப்பட்ட அந்த ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். எனினும், மின்சார கட்டணத்தை குறைந்தது 27 வீதத்தால் குறைக்க முடியும் என்று பொது பயன்பாடுகள் ஆணைக்குழு கடந்த வாரம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அடுத்த ஆறு மாதங்களில் வங்கி வட்டி வீதம் குறையும்

### சாகல ரத்நாயக்க நம்பிக்கை

கொழும்பு, மே 25

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சரியான தீர்மானங்களை அச்சமின்றி எடுத்தமையின் காரணமாகவே இன்று நாடு வழமைக்கு திரும்பியுள்ளது. அவரின் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் அடுத்த 6 மாதங்களுக்குள் வங்கி வட்டி வீதங்களைக் குறைக்க முடியும் என்று ஜனாதிபதி அலுவலகப் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்று கிருலப்பனையில் அவர் பங்கேற்ற நிகழ்விலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், கடந்த ஆண்டு இதே காலப் பகுதியில் இலங்கையில் காணப்பட்ட நெருக்கடி நிலைமை இந்தளவுக்கு விரைவாக தீர்க்கப்படும் என எதிர்பார்க்கவில்லை என்று பலரும் குறிப்பிடுகின்றனர். எம்மைப் போன்று பாதிக்கப்பட்ட பல நாடுகள் உள்ளன. அவை பல வருடங்களாக நாணய நிதியத்தின் உதவியைப் பெற முயற்சித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், எம்மால் குறுகிய காலத்துக்குள் அந்த உதவியைப் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது. இலங்கை மீது நாணய நிதியத்துக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி யது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவாவார்.

அவரின் சர்வதேச தொடர்புகள் மாத்திரமின்றி , சரியான தீர்மானங்களை அச்சமின்றி நடைமுறைப்படுத்தியமையும் இதில் செல்வாக்கு செலுத்தும் பிரதான காரணியாகும். சில சந்தர்ப்பங்களில் இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்ட தீர்மானங்கள் மக்களுக்கு பொருத்தமானவையாகக் காணப்படவில்லை.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்காகவே ஜனாதிபதி அவ்வாறான தீர்மானங்களை எடுத்தார். எவ்வாறிருப்பினும், தற்போது அந்த நெருக்கடிகள் படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றன. ரூபாயின் பெறுமதி உயர்வடையும் போது பொருட்களின் விலைகள் மேலும் குறைவடையும். வர்த்தகம் , சுற்றுலாத் துறை என்பவற்றை மேம்படுத்துவதன் ஊடாகவும் , இந்தியாவைப் போன்று டிஜிற்றல் மயமாக்கல் ஊடாகவும் எம்மால் அந்த இலக்கை துரிதமாக அடைய முடியும்.

ஊழல் , மோசடிகள் இன்றி நேரடியாக மக்களுக்கு அரச சேவைகளை வழங்க முடியும். அதற்கான திட்டமிடல்கள் எம்மிடமுள்ளன. அதற்கமைய எதிர்வரும் 6 மாதங்களுக்குள் வங்கி வட்டி வீதங்களையும் குறைக்க முடியும் - என்றார். (ஐ)

# மின்சார சபை மறுசீரமைப்பு; ஜப்பானுடன் கலந்துரையாடல்

கொழும்பு, மே 25

இலங்கை மின்சார சபையின் தற்போதைய மறுசீரமைப்பு செயல்முறைகள் குறித்து ஜப்பானின் ஜைக்கா நிறுவனத்துக்கு விளக்கமளித்துள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஜைக்கா நிறுவனத்தின் தலைமைப் பிரதிநிதி டெட்சுயா யமடா உள்ளிட்ட குழுவினருடன் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே இது குறித்து விளக்கமளிக்கப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, மறுசீரமைப்பு செயலகத்தை நிறுவுவதற்கும் ஜைக்கா உதவும் என அதன் பிரதிநிதிகள் அமைச்சரிடம் உறுதியளித்துள்ளனர்.

அடுத்த 12 மாதங்களில் மின்சார சபை சீர்திருத்த மாற்றத் திட்டத்தை நடைமுறைப்படுத்த குறித்த செயலகத் தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பதவி...

குகளும் எதிராக 77 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியும் சிறீ லங்கா சுதந்திர கட்சியின் சுயாதீன உறுப்பினர் துமிந்த திஸநாயக்க, மற்றும் அநுர பிரியதர்ஷன யாப்பா, ஜோன் செனவிரத்ன, குமார் வெல்கம, ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து தனித்து செயல்படும் வடிவேல் சுரேஷ், ஏ. எச். எம். பௌசி ஆகியோர் பிரேரணையை ஆதரித்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தி, மேலவை இலங்கை கூட்டமைப்பு, சுதந்திர மக்கள் கூட்டணி, தேசிய மக்கள் சக்தியின் எம். பிக்கள் பிரேரணையை எதிர்த்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் வாக்களிப்பின்போது சபையில் இருக்கவில்லை.

கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற விசேட கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்கம் செய்யும் பிரேரணை நேற்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, பிரேரணை தொடர்பான விவாதம் நேற்று காலை முதல் நடைபெற்ற நிலையில் மாலை 5 மணியளவில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. (ஐ)

## பொலிஸ்...

தையிட்டி விகாரைக்கு எதிராக போராடிய அவர் உட்பட 9 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். நேற்றைய தினம் இவர்கள் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

தனக்காக தானே முன்னிலையாகி வாதடிய சட்டத்தரணி சுகாஷ் வழக்கு முடிவின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

"இன்று பத்திகையொன்றில் ஒரு விடயம் வெளியாகியிருந்தது. பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஒரு கொலை வழக்கு மற்றும் ஒன்பது மனித உரிமைகள் மீறல் வழக்குகளில் தொடர்புபட்டவர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தப் பொறுப்பதிகாரியால் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம்.

அத்துடன், நீதிமன்ற உத்தரவுப்படி நேற்று (நேற்று முன்தினம்) நான் போராட்ட இடத்துக்கு செல்லவில்லை. பின்னர், அங்குள்ள செல்வராசா கஜேந்திரனுடன் சட்டவிவகாரம் பற்றி ஆலோசிக்க சென்ற போதே என்னை கைது செய்தனர். நான் போராட்டத்தில் ஈடுபடவில்லை. தனியார் காணிக்குள் பாராளுமன்ற உறுப்பினருடன் பேசிக் கொண்டிருந்தேன்.

சட்டத்தரணிக்கான உடையிலிருந்த போது, பலவந்தமாக என்னை இழுத்து வந்து வாகனத்தில் ஏற்றினர். இது சட்டவிரோதம். என்னை கைது செய்த 24 மணித்தியாலங்களின் பின்னரே நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

ஓர் ஊடகவியலாளரும் கைதாகியிருந்தார். இவற்றை சுட்டிக்காட்டினேன்.

சட்டத்தரணிகளும், ஊடகவியலாளர்களும் சம்பவ இடத்தில் நிற்கும் போது பொலிஸார் கவனமாக செயல்பட வேண்டுமென நீதிமன்றம் பொலிஸாரை அறிவுறுத்தியதுடன், இந்த விடயங்களை விசாரிக்க பொலிஸ் அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது", என்றார்.

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# தமிழினப் படுகொலை நினைவுச் சின்னம் கனடாவிலுள்ள இலங்கை தூதரகம் எதிர்ப்பு

றொறன்ரோ, மே 25

இலங்கையின் தமிழ் இனப்படு கொலையை நினைவு கூரும் வகையில் நினைவுச் சின்னம் அமைப்பதற்கு கனடாவின் இலங்கைத் தூதரகம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

றொறன்ரோ பகுதியின் பிரம்டன் எனப்படும் நகராட்சி பகுதியில் இந்த நினைவிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் விழா அண்மையில் நடைபெற்றது.

இலங்கையின் ஆட்சேபனை இருந்தபோதிலும், இலங்கை தமிழர்கள் அதிகம் வாழும் பிரம்ப்டன் நகரத்தின் முதல்வர் பற்றிக் பிரவுன் இந்த நினைவுச்சின்னத்தை நிர்மாணிப்பதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஒட்டாவாவிலும் இதேபோன்ற நினைவுச்சின்னம் தேவை என்று என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

எனினும் நகராட்சி முதல்வர் அதனை நிராகரித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# சித்தி பெறாத 350 ஆசிரிய பயிலுநர்களுக்கு மீண்டும் பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம்!

## சபையில் கூறினார் கல்வி அமைச்சர்

கொழும்பு, மே 25

ஆசிரிய நியமனத்திற்காக, தேசிய கல்வியியற் கல்லூரிகளில் நடத்தப்பட்ட பரீட்சைகளில் சித்தியடையாத ஆசிரிய பயிலுநர்களுக்கு மீண்டும் அந்த பரீட்சையில் தோற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் பயிற்சியை நிறைவு செய்துள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் சித்தியடையாமல் இருப்பதால், அவர்கள் மீண்டும் தோற்றுவதற்கு இன்னும் ஒரு வருடம் செல்லும் நிலை இருப்பதாக நேற்றைய பாராளுமன்ற அமர்வின்போது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் சுட்டிக்காட்டினார்.

அதற்கான ஏதேனும் வேலைத்திட்டம் உள்ளதா? என, அவர் கல்வி அமைச்சரிடம் வினவியுள்ளார்.

இதற்கு பதிலளித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, தேசிய கல்வியற் கல்லூரியில் 7 ஆயிரத்து 800 பேர் பயிற்சியை நிறைவு செய்து நியமனத்தை எதிர்பார்த்துள்ளனர்.

அவர்களில் 350 பேர் குறித்த பரீட்சையில் சித்தியடையாதுள்ளனர்.

எனவே, முதல் கட்டமாக 7500 பேருக்கு நியமனத்தை வழங்கியதன் பின்னர், எஞ்சிய 350 பேருக்கும் மீளவும் அந்த பரீட்சைக்கு தோற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

அந்த பரீட்சையை காலந்தாழ்த்தாது எதிர்வரும் 3 மாதங்களுக்குள் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கூறினார். (அ)

# விமானம் தாமதமாகியதால் பறிபோனது தொழில்வாய்ப்பு

கொழும்பு, மே 25

கொரிய மொழி பரீட்சையில் தேர்ச்சி பெற்று கொரியாவுக்கு தொழில்வாய்ப்புக்காக செல்லவிருந்த நிலையில் விமானம் தாமதமானதால் 48 இளைஞர்கள் தொழில்வாய்ப்பை இழந்துள்ளனர்.

குறித்த 48 இளைஞர்களும் நேற்று முன் தினம் இரவு கொரியாவுக்கு தொழிலுக்குச் செல்வதற்காக விமான நிலையத்துக்கு சென்றுள்ளனர்.

இந்த நிலையில் இரவு 08 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கவிருந்த சிறிலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானம் தாமதமடைவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நேற்று அதிகாலை 06 மணிக்கே விமானம் பயணிக்கவுள்ளதாகவும் 10 மணித்தியாலம் தாமதமடையும் எனவும் அறிவிக்கப்பட்டது.

10 மணித்தியாலங்கள் தாமதமடைந்தமையினால் தெரிவு செய்யப்பட்ட பணியாளர்களை தொழில்வாய்ப்பிலிருந்து நிராகரிப்பதாக கொரிய நிறுவனங்களின் அதிகாரிகள் அறிவித்துள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

# ரூபாவின் பெறுமதி உயர்வு

கொழும்பு, மே 25

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் தெரிவித்தன.

இதன்படி நேற்று டொலரின் கொள்வனவு விலை 297.98 ரூபாவாகவும் விற்பனை விலை 311.23 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதேவேளை, நேற்று முன் தினம் அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 299.19 ரூபாவாகவும் விற்பனை விலை 312.33 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது. (அ)

# சீன கப்பலிலிருந்து 14 சடலங்கள் மீட்பு

கொழும்பு, மே 25

இந்தியப் பெருங்கடலில் கடந்த வாரம் கவிழ்ந்த சீனக் கப்பலில் இருந்து மொத்தம் 14 சடலங்களைக் கண்டுபிடித்ததாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கையின் தெற்கே உள்ள கடற்பரப்பில் கடந்த 16ஆம் திகதி பதிவாகியிருந்த இந்த விபத்தை அடுத்து மீட்பு நடவடிக்கைகளுக்கு இலங்கைக் கடற்படையினரும் உதவி புரிந்து வருகின்றனர்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவின் பணிப்புரையின் பேரில் கண்காணிப்புக் கப்பலான எஸ்.எல்.என்.எஸ்.விஜயபாகு பணிகளில் ஈடுபட்டுள்ளது.

இந்தநிலையில், இலங்கைக் கடற்படையின் நீர்மூழ்கிக் குழுவினர், முன்னதாக 2 சடலங்களைக் கண்டெடுத்த நிலையில் தற்போது 12 பணியாளர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில், 17 சீன பிரஜைகள், 17 இந்தோனேசியர்கள் மற்றும் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த 5 பேர் என 38 பேர் கப்பலில் இருந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# 6 பொருட்களின் விலையை நேற்று குறைத்தது சதொச!

கொழும்பு, மே 25

ஆறு பொருட்களின் விலையை நேற்று முதல் அமுலாகும் வகையில் சதொச குறைத்துள்ளது.

இதன்படி, 400 கிராம் சதொச பால் மா விலை 50 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 1030 ரூபாவாகும்.

அத்துடன், ஒரு கிலோகிராம் உலர்ந்த மிளகாய் விலை 45 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் விலை 1350 ரூபாவாக உள்ளது.

மேலும், சிவப்பு பருப்பு, சோயாமீட், வெங்காயம் மற்றும் வெள்ளை சர்க்கரை போன்ற பொருட்களின் விலையிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, ஒரு கிலோகிராம் பருப்பின் விலை 325 ரூபாவாகவும், சோயாமீட் விலை 660 ரூபாவாகவும், பெரிய வெங்காயத்தின் விலை 129 ரூபாவாகவும், வெள்ளைச் சீனியின் விலை 239 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது. (அ)

# பழுதடைந்த உணவுப் பொருள் விற்ற உணவகத்துக்கு எதிராக நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணம் நகரத்தில் பழுதடைந்த உணவுப் பொருட்களை விற்பனை செய்த பிரபல அசைவ உணவகம் ஒன்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரின் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் சில நாட்களுக்கு முன்னர் பழுதடைந்த உணவு விற்கப்பட்டதாக பொது மக்கள் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பாலமுரளிக்கு முறைப்பாடு செய்திருந்தனர்.

இதையடுத்து, நேற்றுமுன்தினம் சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையில் யாழ்ப்பாணம் மாநகர பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் உள்ளிட்ட குழுவினர் உணவகத்தில் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது, உணவகத்தின் பணியாளர்கள் இருவர் மருத்துவ சான்றிதழ் இல்லாமல் இருந்தமை கண்டறியப்பட்டது. அத்துடன், மனித பாவனைக்கு உதவாத கோழி இறைச்சி, ரொட்டி, சோறு என 20 கிலோ உணவு பொருட்களும் பழுதடைந்த பழங்களும் கைப்பற்றப்பட்டன.

வியாபார நிலைய உரிமையாளருக்கு எதிராக நேற்று முன்தினமே யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் சான்று பொருட்களை அழிக்குமாறு உத்தரவிட்டதுடன், கடை உரிமையாளரை ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் செல்லவும் அனுமதித்தார். அத்துடன், வழக்கை எதிர்வரும் ஜூன் 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஐ-03)

# 29ஆம் திகதி மூடப்படும் அமெரிக்கத் தூதரகம்

கொழும்பு, மே 25

இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மற்றும் அதன் தூதரகப் பிரிவு ஆகியவை எதிர்வரும் 29ஆம் திகதி மூடப்படவுள்ளன.

அதன்படி, அன்றைய தினம் தூதரகத்துக்கு வந்து சேவைகளைப் பெற வேண்டாம் என தூதரகம் அறிவித்துள்ளது.

மேலும், அமெரிக்க இராணுவ உறுப்பினர்களின் நினைவாக 'நினைவு தின விடுமுறை' அனுஷ்டிக்கப்படவுள்ளமையே தூதரகம் மூடப்படுவதற்கான காரணம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# புத்தகப்பை, காலணி விலை குறைக்கப்படும்

கொழும்பு, மே 25

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் புத்தகப்பைகள் மற்றும் காலணி ஆகியனவற்றின் விலைகள் குறைக்கப்படவுள்ளதாக பதில் நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்தார்.

இதற்கமைய எதிர்வரும் 15ஆம் திகதி முதல் காலணி மற்றும் பைகளுக்கான விலை 10 வீதத்தால் குறைக்கப்படவுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட டொலர் பற்றாக்குறையைத் தொடர்ந்து காலணி மற்றும் பைகள் உள்ளிட்ட சில பொருட்களுக்கான இறக்குமதி இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாராளுமன்றத்தில் இரு தங்க திருடர்கள்

## எரான் விக்ரமரத்ன கூறுகிறார்

கொழும்பு, மே 25

பாராளுமன்றத்தில் ஒரு தங்க திருடன் இருப்பதாக தாம் தொடர்ந்தும் கேட்க முடிந்தது எனவும் தற்போது இரண்டு தங்க திருடர்கள் இருக்கின்றனர் என்பதைக் கேட்க கூடியதாக உள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவியில் இருந்து நீக்குவது தொடர்பான பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

பாராளுமன்றத்தில் மதுபான விற்பனை நிலைய உரிமையாளர்கள், போதைப்பொருள் முதலாளிகள், கல்,மணல் வியாபாரிகள், தரகு காகங்கள் இருக்கின்றனர் எனக் கூறி 225 பேரையும் விரட்டவேண்டும் என்ற மக்கள் நிலைப்பாடும் உள்ளது.

இப்படியான பாராளுமன்றம் சுயாதீன ஆணைக்குழு ஒன்றின் தலைவரை நீக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது எனவும் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார். (அ)

# பொருட்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்

கொழும்பு, மே 25

பல பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் அடுத்த மாதம் தளர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சிக்கு அத்தியாவசியமான மற்றும் அவசியமான பல பொருட்களுக்கே கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என அவர் கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.